بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 43

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரபீயுஸ் ஸானீ 20 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - அகா 24 ★ அக்டோபர் 24 2024


## அல்லாஹ்வின் கட்டளை

وَسَخَّرَ لَکُمُ الَّیۡلَ وَالنَّہَارَ ۙ وَالشَّمۡسَ وَالۡقَمَرَ ؕ وَالنُّجُوۡمُ مُسَخَّرٰتٌۢ بِاَمۡرِہٖ ؕ اِنَّ فِیۡ ذٰلِکَ لَاٰیٰتٍ لِّقَوۡمٍ یَّعۡقِلُوۡنَ ۝

பொருள்

அவன் இரவையும், பகலையும் சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு ஊதியமின்றிப் பணி செய்வதற்காக அமைத்துள்ளான். மேலும், (ஏனைய) எல்லா நட்சத்திரங்களும் அவனது கட்டளையினால் (உங்களுக்குப்) பணி செய்வதற்கே நியமிக்கப்பட்டுள்ளன. சிந்தித்து செயலாற்றுபவர்களுக்கு நிச்சயமாக இதில் பல அடையாளங்கள் உள்ளன.

(அந்நஹ்ல் : 13)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## தொழுகை நேரம் மிகவும் வீணான காலமாக கருதப்படுவது மிகவும் விநோதமான விஷயமாகும். அந்த நேரத்தில் ஏராளமான நன்மைகளும் பயன்களும் இருக்கின்றன

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

தொழுவதும், வுளூ செய்வதும் தன்னகத்தே மருத்துவ பயன்களையும் கொண்டிருக்கின்றது. ஒருவர் தினமும் முகத்தை கழுவாவிட்டால் பின்னர் அவருக்கு கண் நோய் வந்துவிடுகின்றது. மேலும், கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து, பார்வை குறைபாட்டை ஏற்படுத்தும் நோய் வந்துவிடும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். மேலும் ஏராளமான நோய்கள் இதன் மூலம் தோன்றிவிடுகின்றன. எனவே வுளூ செய்வதற்கு ஏன் வலிக்கின்றது? என்று இப்போது ஒருவர் கூறட்டும். வுளூ செய்வது வெளிப்படையில் எவ்வளவு சிறந்த விஷயமாகும்! வாயில் நீருற்றி வாயை கொப்பளிக்க வேண்டும். பல்துலக்குவதால் வாயில் உள்ள துர்நாற்றம் நீங்கி விடுகின்றது.பற்கள் வலிமையாகி விடுகின்றன. மேலும் பற்களின் வலிமை என்பது உணவை நன்றாக மெல்வது மற்றும் விரைவான செரிமானம் ஆகியவற்றிகான காரணியாக அமைகின்றது. அடுத்து, மூக்கை சுத்தப்படுவது இருக்கின்றது. மூக்கில் ஏதாவது துர்நாற்றம் நுழைந்து விட்டால் பின்னர் அது சிந்தனையை சிதறடித்து விடுகின்றது. எனவே இதில் என்ன தீங்கு உள்ளது? என்று தற்போது கூறுங்கள். இதன் பிறகு அவர் அல்லாஹ்விடம் தனது தேவையை எடுத்துக் கொண்டு செல்கின்றார். மேலும், அவருக்கு தனது தேவைகளை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விடுகின்றது. துஆ செய்வதற்கான நேரம் கிடைக்கின்றது. அதிகபட்சம் தொழுகையில் ஒரு மணிநேரம் ஆகின்றது. சில தொழுகையாளிகளோ பதினைந்து நிமிடங்களுக்கும் குறைவான நேரத்திலேயே தொழுது விடுகின்றனர். அடுத்து மிகவும் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், தொழுகைக்கான நேரத்தை வீணான நேரமாக கருதப்படுகின்றது. அதில் எந்த அளவிற்கு நன்மைகளும், பயன்களும் இருக்கின்றன. பகல் முழுவதும், இரவு முழுவதும் வீணான மற்றும் தேவையற்ற விஷயங்கள் அல்லது விளையாட்டுகள் மற்றும் கேளிக்கைகளில் நேரத்தை வீணடித்தால் பின்னர் அந்தப் பணிக்கு

இதன் தொடர்ச்சி. 12-ம் பக்கம் .....

## இறைவன் புறமிருந்து உலகில் ஓர் இயக்கம் நிறுவப்படும்போது பின்னர் அந்நிலையில் ஷைத்தானுடன் தொடர்பு கொண்ட தீய ஆன்மாக்கள் ஆவேசம் அடைந்து விடுகின்றன. மேலும் எப்படியாவது உண்மை பூமியில் பரவிவிடுவதை தடுத்து விட வேண்டும் என்று தமது முழு ஆற்றலையும் செலவிடுகின்றன

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ் வசனம் 53 மற்றும் அதற்கு அடுத்து வருகின்ற வசனங்களுக்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

இன்று வரை இப்படிப்பட்ட எந்தவொரு நபியும், தூதரும் தோன்றவில்லை. அதாவது அவரது ஒவ்வொரு நோக்கம், ஒவ்வொரு விருப்பம் மற்றும் ஒவ்வொரு துடிப்பிற்கும் எதிராக ஷைத்தான் தடைகளை ஏற்படுத்தாமல் இருந்ததே கிடையாது. ஏனெனில், ஷைத்தானுக்கு தெரியும். அதாவது நபி வெற்றிப் பெற்றுவிட்டால் பின்னர் தனக்கு எங்குமே தங்குமிடம் இருக்காது என்பதை அவன் அறிவான். எவ்வாறு மரணிக்கின்ற நபர் எப்படியாவது மரணத்தின் கீழ் சென்றுவிடுவதிலிருந்து தப்பித்து விட வேண்டும் என்று தனது முழு ஆற்றலையும் செலவிடுகின்றாரோ அதுபோன்று ஷைத்தானும், அவனது சந்ததிகளும் நபிமார்கள் மற்றும் அவர்களுடைய ஜமாஅத்திற்கு எதிராக முழு அழுத்தத்தையும் கொடுக்கின்றனர். எவர்கள் மரணிக்கக் கூடியவர்களை பார்த்து இருப்பார்களோ அவர்கள் இதனை அறிவர். அதாவது, அந்த மயக்க நிலையிலும், உலகம் மற்றும் அதிலுள்ளவற்றைப் பற்றி மரணிக்கின்றவருக்கு எதுவும் தெரியாது. அப்போது எல்லா ஆற்றலும் வீழ்ச்சியடைந்திருக்கும். மேலும், எல்லா ஆற்றலும் செயலிழந்திருக்கும். ஆயினும் மரணிப்பதற்கு சில நிமிடத்திற்கு முன் மரணிப்பவர் இவ்வாறு அழுத்தம் கொடுக்கின்றார். அதாவது, அவர் இந்த உலகிற்கு மீண்டும் திரும்பிவர விரும்புவதைப் போன்று அவர் செயல்படுகின்றார். அவரது முழு உடலும் அதிர்ந்து விடுகின்றது. கழுத்து மேலே எழும்பி விடுகின்றது. மேலும் எப்படியாவது தப்பித்து விட வேண்டும் என்று அவர் தனது ஆற்றலின் இறுதி துகள் வரை அதற்காக செலவிடுகின்றார். இது மயக்க நிலையில் இருக்கின்ற மற்றும் எந்த மனிதனின் ஆற்றல் தீர்ந்து விட்டதோ அந்த மனிதனின் நிலையாக இருக்கின்றது. இறைவன் புறமிருந்து உலகில் ஓர் இயக்கம் நிறுவப்படும்போது பின்னர் அந்நிலையில் ஷைத்தானுடன் தொடர்பு கொண்ட தீய ஆன்மாக்கள் அல்லது சில பாவங்களின்

இதன் தொடர்ச்சி. 12-ம் பக்கம் .....

## நபிமொழி

### ஒருவர் தான் கொடுத்த அன்பளிப்பை தானே விலைக்கு வாங்குவது தடுக்கப்பட்டுள்ளது

(2623) ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அதாவது நான் அல்லாஹ்வின் வழியில் ஒரு குதிரையை சவாரிக்காக கொடுத்தேன். அப்போது அது எவரிடம் இருந்ததோ அவர் அதனை வீணடித்து விட்டார். எனவே நான் அதனை அவரிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்பினேன். மேலும்,அவர் அதனை மலிவு விலைக்கே விற்பனை செய்வார் என்று நான் எண்ணம் கொண்டிருந்தேன்.

நான் இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: அதனை விலைக்கு வாங்காதீர்கள்; அது உங்களுக்கு ஒரு திர்ஹமிற்கு கிடைத்தாலும் சரியே ; ஏனெனில் தனது தருமத்தை திரும்பப் பெறக் கூடியவர் தனது வாந்தியைத் தானே திரும்பத் தின்கின்ற அந்த நாயைப் போன்றவர் ஆவார்.

### சாட்சியத்தின் அடிப்படையில் தீர்ப்பு

(2624) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உபைதில்லாஹ் பின் அபீ முலைக்கா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இப்னு ஜித்ஆனால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஸுஹைபுடைய இரண்டு மகன்களும், தங்கள் தந்தையான ஸுஹைப் (ரலி) அவர்களுக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் (தம் வாழ்நாளில்) இரண்டு வீடுகளையும், ஓர் அறையையும் (அன்பளிப்பாகக் ) கொடுத்ததாக வாதம் செய்தனர். அப்போது, உங்களுக்கு இந்த விஷயத்தில் யார் சாட்சியம் அளிப்பார்? என்று மர்வான் கேட்டார். அதற்கு, அவர் (அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) (சாட்சியம்) ஆவார் என்று கூறினார்: அன்னாரை மர்வான் அழைத்தார். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸுஹைப் அவர்களுக்கு நிச்சயமாக இரண்டு வீடுகளையும், ஓர் அறையையும் வழங்கியிருந்தார்கள் என்று அன்னார் சாட்சியம் அளித்தார்கள். ஆக,மர்வான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் சாட்சியத்தின்படி ஸுஹைப் அவர்களின் பிள்ளைகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கி விட்டார்கள்.

(ஸஹீஹ் புகாரீ, தொகுதி 4, கிதாபுல் ஹிபா)

* * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்ஸாப் போரின்போது உணவில் பரக்கத் ஏற்பட்ட சம்பவங்கள் & அகழ் தோண்டப்பட்ட போது நயவஞ்சகர்கள் மற்றும் நம்பிக்கை கொண்டோரின் நிலைமைகள் & ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போருக்கான ஆயத்தம் & முஸ்லிம்களின் எண்ணிக்கை &இணை வைப்பாளர்கள் மதீனாவை சென்றடைதல் மேலும் அதற்கு பிறகான நிலைமைகள் மற்றும் பனூ குறைழா கோத்திரத்தின் நம்பிக்கை துரோகம் ஆகியவற்றின் விளக்கம்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

أَبْشِرُوْا يَامَعْشَرَ الْمُؤْمِنِيْنَ
بِنَصْرِ اللهِ تَعَالٰى وَعَوْنِهٖ

பொருள்: நம்பிக்கை கொண்டோரின் ஜமாஅத்தே! அல்லாஹ்வின் உதவி மற்றும் ஆதரவைக் கண்டு மகிழ்ச்சி அடையுங்கள்; ஒருநேரம் வரும்; அப்பொழுது நான் கஅபாவை வலம் வந்து கொண்டிருப்பேன்.அதனுடைய திறவுகோல்கள் என் கைகளில் இருக்கும். கிஸ்ராவும், கைஸரும் நிச்சயமாக அழிந்து போவார்கள். அவர்களின் செல்வங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யப்படும் என்று உறுதியாக நான் நம்புகிறேன்

மதிப்பிற்குரிய ஹபீபுர் ரஹ்மான் ரேஸ்வீ ஸாஹிப், டாக்டர் ஸய்யது ரியாஸ் அல்ஹஸன் ஸாஹிப், மதிப்பிற்குரிய பேராசிரியர் அப்துல் ஜலீல் ஸாதிக் ஸாஹிப் ரப்வா, மதிப்பிற்குரிய மாஸ்டர் முனீர் அஹ்மத் ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 செப்டம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **தபூக்** மாதம் **20 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அகழ்ப் போர் தொடர்பாக கூறப்பட்ட போது அதில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்டது. உணவில் பரக்கத் ஏற்பட்டது தொடர்பான அற்புதம் பற்றி கடந்த குத்பாவில் நான் கூறினேன். அதேபோன்று பேரீத்தம் பழங்களில் பரக்கத் ஏற்பட்ட சம்பவமும் காணக் கிடைக்கிறது. கொஞ்சமாக இருந்த பேரீத்தம் பழங்களை அகழ் தோண்டக் கூடிய அனைவரும் உண்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அதைப் பற்றிய விபரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: அகழ்ப் போர் தொடர்பான ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் பஷீர் பின் ஸஅது (ரலி) அவர்களின் மகள் எடுத்துரைக்கிறார்கள்: என் தாயார் அம்ரஹ் பின் ரவாஹா எனது ஆடையில் கொஞ்சம் பேரீத்தம் பழங்களை வைத்து, மகளே! இதை உம் தந்தையிடமும், மாமாவிடமும் கொடுத்து இது உங்களுக்கான காலை உணவாகும் என்று கூறிவிடு என்றார்கள். நான் அந்த பேரீத்தம் பழங்களை வாங்கிக் கொண்டு சென்றேன். என் தந்தையையும், மாமாவையும் தேடியவாறு பெருமானார் (ஸல்) அவர்களை கடந்து சென்றபோது, சிறுமியே! உன்னிடம் என்ன பொருள் உள்ளது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது பேரீத்தம் பழங்கள் ஆகும். என் தாயார் என் தந்தை பஷீர் பின் ஸஅது அவர்களுக்காகவும், என் மாமா அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களுக்காகவும் கொடுத்தனுப்பியுள்ளார்கள் என்று கூறினேன். இதை என்னிடம் கொடுத்து விடு! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். நான் அந்த பேரீத்தம் பழங்களை அன்னாருடைய இரு கைகளிலும் வைத்து விட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பேரீத்தம் பழங்களை ஒரு துணியில் போட்டார்கள். பிறகு அவற்றை இன்னொரு துணியை கொண்டு மூடினார்கள். மக்களை உணவுக்காக அழையுங்கள் என்று ஒரு நபரிடம் கூறினார்கள். ஆகவே அகழ் தோண்டக்கூடிய அனைவரும் (அங்கு) ஒன்று கூடி அந்த பேரீத்தம் பழங்களை சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்த பேரீத்தம் பழங்கள் அதிகரித்துக் கொண்டே சென்றன. எந்த அளவுக்கு என்றால் அனைவரும் உண்டு முடித்த பின்பும் கூட துணியின் ஓரத்தில் இருந்து பேரீத்தம் பழங்கள் கீழே விழுந்து கொண்டிருந்தன.

உணவில் பரக்கத் ஏற்பட்டது தொடர்பாக மேற்கொண்டு சம்பவங்களும் காணக் கிடைக்கின்றன. உபைதுல்லாஹ் பின் அபீ புர்தா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர்கள் கூறுகிறார்கள்: உம்மு ஆமிர் அஷ்அலியா அவர்கள் பெருமானார் (ஸல்) , அவர்களின் சமூகத்தில் ஒரு பாத்திரத்தை அனுப்பி வைத்தார்கள். அதில் ஹய்ஸ் இருந்தது. ஹய்ஸ் என்பது பேரீத்தம் பழம், நெய் மற்றும் பன்னீர் சேர்த்து சமைக்கப்படும் உணவாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கூடாரத்தில் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்களின் அருகில் இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்கள் தம் தேவைக்கேற்ப அதிலிருந்து உண்டார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள். அன்னாருடைய அறிவிப்பாளர் உணவுக்காக அழைத்தார். ஆகவே அகழ்வாசிகள் அதை உண்டார்கள். எந்த அளவுக்கு என்றால், அதன் மூலமாக அவர்கள் பசியை போக்கிக் கொண்டார்கள். அந்த உணவில் கொஞ்சம் கூட குறைவு ஏற்படாதது போன்று அது முன்பிருந்தது போன்று அப்படியே இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஸாலிக் எனும் இறை அடியார்களின் அந்தஸ்தை பற்றி எடுத்துரைக்கும்போது, அவர்கள் எந்த அளவுக்கு இறை நெருக்கத்தை பெற்று விடுவார்கள் என்றால், உதாரணமாக நெருப்பு இரும்பின் நிறத்தை தமக்குள் எந்த அளவு மறைத்து வைத்துக் கொள்கிறது என்றால் வெளிப்படையாக பார்க்கும் போது கூட அது நெருப்பாகத்தான் தெரிகிறது; வேறு ஒன்றும் தென்படுவதில்லை. இந்த அந்தஸ்தை இறை சந்திப்பு என்பார்கள் என்று கூறிவிட்டு, அதேபோன்று ஸாலிக் எனும் இறை அடியார்களுக்கு கிடைக்கக் கூடிய இறை சந்திப்பு எனும் அந்தஸ்தை பற்றி எடுத்துரைத்தவாறு அன்னார்(ஸல்) கூறுகிறார்கள்:

இறை சந்திப்பு எனும் இந்த அந்தஸ்தில் சில சமயங்களில் மனிதன் மூலமாக எவ்வாறான விஷயங்கள் வெளிப்படுகின்றனவென்றால் அது மனிதனுடைய ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டதாக தெரிகிறது. அது இறை ஆற்றல்களின் தன்மையை தன்னுள் கொண்டிருக்கின்றது. உதாரணமாக நம்முடைய தலைவரும், எஜமானரும் தூதர்களின் தலைவரும் நபிமார்களில் சிறப்பானவருமான (ஸல்) அவர்கள் பத்ர் போரில் கையளவு கற்களை காஃபிர்கள் மீது எறிந்தார்கள். கையானது எவ்வித துஆவின் மூலமாகவும் செயல்படவில்லை ; மாறாக, சுயமே தனது ஆன்மிக ஆற்றலினால் செயல்பட்டது. ஆனால், அந்த கையானது இறை ஆற்றலை வெளிப்படுத்தியது. எதிரி படையின் மீது எவ்வாறான அசாதாரண தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர்களில் ஒவ்வொருவருடைய கண்ணின் மீதும் அது தாக்கத்தை ஏற்படுத்தியது. அதிலிருந்து எவரும் தப்பவில்லை. அவர்கள் அனைவரும் குருடர்களைப் போன்று ஆகிவிட்டார்கள். அவர்களிடத்தில் எவ்வாறான கூச்சலும், குழப்பமும், பதற்றமும் ஏற்பட்டது என்றால் பேறிழந்தவர்களைப் போன்று ஓட

ஆரம்பித்தனர். இவ்வகையான எவ்வளவோ அற்புதங்களை பெருமானார் (ஸல்) அவர்கள் தனிப்பட்ட ஆற்றலின் மூலமாக காட்டி இருக்கிறார்கள். அவற்றுடன் எந்த துஆவும் இருக்கவில்லை. பல சமயங்களில், ஒரு குவளையில் குறைவாக இருந்த தண்ணீரில் தம் விரல்களை உள்ளே இட்டதன் காரணமாக அது எந்த அளவு அதிகமாகி விட்டது என்றால் முழு படையினரும், ஒட்டகங்களும், குதிரைகளும் அந்த தண்ணீரை அருந்தின. அவ்வாறிருந்தும் அந்த தண்ணீர் அதே அளவு இருந்தது. ஒரு சில ரொட்டிகளின் மீது கை வைத்ததன் காரணமாக பசியோடும், தாகத்தோடும் இருந்த ஆயிரக்கணக்கானவர்கள் அதன் மூலமாக வயிறு நிறைய உண்ட பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. சில சமயங்களில் குறைவாக இருந்த பாலில் தம் நாவினால் அருளை வழங்கி ஒரு கூட்டத்தின் வயிறை அதன் மூலம் நிரம்பச் செய்தார்கள். சில சமயங்களில் கசப்பான நீரைக் கொண்டிருந்த கிணறுகளில் தம் உமிழ் நீரை இட்டு அதை மிகவும் இனிப்பான நீராக ஆக்கி இருக்கிறார்கள்.சிலசமயங்களில் கடும் காயமுற்றவர்கள் மீது தம் கையை வைத்து அவர்களை நலமாக்கி இருக்கிறார்கள். சில சமயங்களில் போரில் ஏற்பட்ட துன்பத்தின் காரணமாக கண் விழிகள் வெளியே விழுந்துள்ளன. அப்போது, தம் கையின் அருள் மூலமாக அதை சரி செய்து இருக்கிறார்கள். இவ்வாறே இன்னும் பல வேலைகளை தம் ஆற்றலின் மூலமாக செய்திருக்கிறார்கள். அவற்றுடன் மறைவாக இறை ஆற்றலும் இணைந்திருந்தது.


அகழ் தோண்டப்படும் போது நயவஞ்சகர்கள் மற்றும் நம்பிக்கை கொண்டவர்களிடம் இருந்த நிலையைப் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதனுடைய விபரம் இவ்வாறு வருகிறது : இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதுகிறார்கள்: பல நயவஞ்சகர்கள் பெருமானார் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுடன் சேர்ந்து வேலை செய்வதிலிருந்து சோம்பேறித்தனம் காட்டி வந்தார்கள். கொஞ்சம் வேலை செய்வார்கள்; பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறாமல், அனுமதி வாங்காமல் நழுவி வீட்டுக்கு சென்று விடுவார்கள். முஸ்லிம்களில் எவரேனும் தேவைக்காக செல்ல வேண்டியது வந்தால் அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து செல்வதற்கு அனுமதி கேட்பார். இது நம்பிக்கை கொண்டோரின் நிலையாக இருந்தது. நயவஞ்சகர்களோ(அனுமதி) கேட்காமலேயே சென்று கொண்டிருந்தார்கள். நம்பிக்கை கொண்டோர் எங்கேயாவது செல்வதற்காக அனுமதி கேட்கும் போது பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு அனுமதி கொடுத்து விடுவார்கள். மேலும், அவர்கள் தம் வேலை முழுமை அடைந்த உடன் திரும்பி வந்து விடுவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்கு ஆயத்தமானதை குறித்தும் விவரமாக கூறப்பட்டுள்ளது. அறிவிப்பின் அடிப்படையில் அபூ ஸுஃப்யான் அவர்களின் படை வந்தடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே அகழ் ஆயத்தமாகி விட்டது. திட்டமிட்டபடி, அகழ் தோண்டுவதில் பணியாற்றிய சிறுவர்களும், இளைஞர்களும் பெண்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கோட்டைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆயினும் எவர்கள் 15 வயதை எட்டி இருந்தார்களோ அவர்கள் விரும்பினால் இங்கு இருக்கலாம் ; விரும்பினால் கோட்டைகளுக்கு திரும்பிச் செல்லலாம் என்று கூறப்பட்டது. அவ்வாறான இளைஞர்கள் போரில் பங்கு பெற அனுமதி கொடுக்கப்பட்டது. அவர்களுள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர், ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி), ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ மற்றும் ஹஸ்ரத் ஃபரா பின் ஆஸிப் (ரலி) ஆகியோர் இருந்தனர்.

இப்னு ஹிஷாம் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் தம் பிரதிநிதியாக இப்னு உம்மு மக்தூம் (ரலி) அவர்களை நியமித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸலாஹ் மலைக்கு முன்னால் முகாமைத்தார்கள். ஸலாஹ் என்பது மதீனாவின் வடக்குத் திசையில் உள்ள ஒரு மலையாகும். இது தற்காலத்தில் நபவி பள்ளிவாசலில் இருந்து ஏறக்குறைய 500 மீட்டர் தொலைவில் இருப்பதாக கூறப்படுகிறது. அந்த மலை தமக்கு பின்னால் இருக்கும்படியும், அகழ் முன்னால் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் படையும் அங்குதான் இருந்தது. அன்னாருக்காக தோலினால் ஆன கூடாரம் அமைக்கப்பட்டது. முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடமும், அன்ஸாருடைய கொடி ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்களிடமும் வழங்கப்பட்டது.

முஸ்லிம்களின் எண்ணிக்கையை குறித்தும் வரலாற்றாசியர்களிடத்தில் பெரும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஒருவரை பொறுத்தவரை, 900-யை விட அதிகமானோர் கிடையாது; வேறொருவரை பொருத்தவரை 700 பேர் என்று கூறப்படுகிறது.இன்னொருவரை பொறுத்தவரை 2000 என்றும், இன்னொருவரை பொறுத்த வரை 3000 என்றும் கூறப்படுகிறது. முஸ்லிம்களின் எண்ணிக்கைய குறித்து பல்வேறு இடங்களில் பல்வேறு எண்ணிக்கை கூறப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையை எடுத்துக் கூறுவதில் வரலாற்றாசிரியர்களுக்கு பெரும் சிரமத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அவர்கள் இந்த எண்ணிக்கை பற்றி கூறும்போது, ஓர் அறிவிப்புக்கு முன்னுரிமை அளித்து மற்ற அறிவிப்புகளை தவறு என்று கூறுகிறார்கள். ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முழுமையான அகப்பார்வையுடன் எந்த அறிவிப்பையும் தவறு என்று கூறாமல் அந்த அனைத்து அறிவிப்புகளுக்கும் ஒற்றுமையை நிரூபித்தவாறு அவை தமக்குள் ஒன்று மற்றொன்டுடன் பொருந்திப் போகின்றன என்று எடுத்துரைத்துள்ளார்கள். அது எவ்வாறு என்று அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம் படைவீரர்களின் எண்ணிக்கையை குறித்து வரலாற்றாசிரியர்களிடத்தில் கடும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிலர் அந்த படையினரின் எண்ணிக்கை 3000 என்று எழுதி இருக்கின்றார்கள். சிலர் 1200 என்றும், சிலர் 700 என்றும் எழுதி இருக்கின்றார்கள்.




இது எந்த அளவு பெரிய கருத்து வேறுபாடு என்றால், இதற்கான விளக்கம் வெளிப்படையில் கடினமாகத் தெரிகிறது. வரலாற்றாசிரியர்களால் இதை தீர்க்க இயலவில்லை. ஆனால், நான் இதன் உண்மைத்துவத்தை அடைந்து விட்டேன். அது என்னவென்றால், இந்த மூன்று வகையான அறிவிப்புகளும் சரியானவை ஆகும். உஹது போரை விட்டு நயவஞ்சகர்கள் திரும்பி வந்த பிறகு முஸ்லிம் படை வீரர்கள் எண்ணிக்கை 700 ஆக ஆகியிருந்தது என்று ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அதற்கு இரு வருடங்களுக்கு பிறகுதான் அகழ்ப் போர் நிகழ்ந்தது. அந்த இடைப்பட்ட காலகட்டத்தில் எந்த ஒரு பெரிய கோத்திரமும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மதீனாவில் குடிபெயரவில்லை. ஆகவே வெளியில் இருந்தும் யாரும் வந்திருக்காத பட்சத்தில் 700 பேர் திடீரென்று 3000 பேராக ஆகுவது சாத்தியமற்றதாகும்.

உஹது போருக்கு பிறகு வந்த இரு வருடங்களில் இஸ்லாம் முன்னேற்றமடைந்திருந்த போதிலும், போருக்கு தகுதி பெற்றிருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை உஹது போரில் கலந்து கொண்ட அதே அளவுக்குத்தான் இருந்தது என்பதை இன்னொரு புறம் நாம் மறுக்கவும் முடியாது. கொஞ்சமாவது எண்ணிக்கை அதிகரித்திருக்க வேண்டும். ஆகவே இந்த இரு விஷயங்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது, போரிட தகுதி பெற்றிருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை அகழ்ப் போரின் போது 1200 ஆக இருந்தது என்று கூறப்படுகின்ற அறிவிப்பு சரியானதாக தெரிகிறது. இப்பொழுது கேள்வி என்னவென்றால், ஒருவர் 3000 என்றும் இன்னொருவர் 700 என்றும் ஏன் எழுதி இருக்கிறார்கள்? இதற்கான பதில் என்னவென்றால், இந்த இரு அறிவிப்புகளும் இரு வேறு நிலைகளில், இரு வேறு கண்ணோட்டத்தின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அகழ்ப் போர் மூன்று பகுதிகளாக உள்ளது. ஒன்று, எதிரி மதீனாவுக்கு முன்னால் வந்திருக்காத போது அகழ் தோண்டப்பட்டு கொண்டிருந்த நேரமாகும். அகழ் தோண்டப்பட்டுக் கொண்டிருந்த போது அதே பணியில் குறைந்தபட்சம் மண்ணை சுமந்து செல்லக் கூடிய தொண்டுகளை குழந்தைகளாலும் செய்ய இயலும். சில பெண்களாலும் இந்த பணிகளில் உதவி செய்திருக்க முடியும். ஆகவே அகழ் தோண்டப்பட்டு கொண்டிருக்கும் போது முஸ்லிம்களின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது. ஆனால், அதில் குழந்தைகளும் இருந்தனர். ஸஹாபியா பெண்களின் ஆர்வத்தை காணும்போது, அந்த எண்ணிக்கையில் சில பெண்களும் இருந்திருப்பார்கள் என்று நாம் கூற இயலும். அவர்கள் அகழ் தோண்டக் கூடிய பணியை செய்திருக்க மாட்டார்கள்தான். ஆயினும், மேற்கூறப்பட்ட பணிகளில் பங்கெடுத்திருப்பார்கள். இது என்னுடைய கருத்து மட்டுமின்றி, வரலாற்றைப் பார்க்கும் போதும் எனது கருத்து உண்மைப்படுத்தப்படுகிறது. அகழ் தோண்டக் கூடிய நேரம் வந்தபோது அனைத்து சிறுவர்களும் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். அனைத்து ஆண்களும் - அவர்கள் பெரியவர்களாக இருந்தாலும் சரி. குழந்தைகளாக இருந்தாலும் சரி. அகழ் தோண்டக் கூடிய பணிகளில் அல்லது அதில் உதவி செய்யக் கூடிய பணிகளை செய்து கொண்டிருந்தார்கள். பிறகு எதிரி வந்தடைந்த

போது, போர் ஆரம்பித்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள் 15 வயதிற்குட்பட்ட அனைத்து சிறுவர்களையும் (அங்கிருந்து) செல்லுமாறு கட்டளையிட்டார்கள். எவர்கள் 15 வயதை அடைந்திருந்தார்களோ அவர்கள் விரும்பினால் இருக்கலாம் இல்லையென்றால் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டது.

இந்த அறிவிப்பில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், அகழ் தோண்டும் போது முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்துள்ளது. போரின் போது குறைந்து விட்டது. ஏனெனில், பருவ வயதுக்குட்பட்டவர்கள் திரும்பிச் செல்லும்படி கட்டளையிட்டார்கள். ஆகவே எந்த அறிவிப்புகளில் 3000 என்று கூறப்பட்டுள்ளதோ அது அகழ் தோண்டும் போது இருந்த எண்ணிக்கையாகும். அதில் சிறுவர்களும் இணைந்திருந்தார்கள். மற்ற போர் விவரங்களைக் கண்டு நான் அனுமானித்து கூறியது போல் (அகழ்ப் போரில்) பெண்களும் சிலர் கலந்து கொண்டிருந்தார்கள். ஏனெனில், மற்ற போர்களைப் பற்றிய அறிவிப்புகளை காணும்போது, அவற்றில் பெண்களும் கலந்து கொண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், 1200 என்ற எண்ணிக்கை போர் ஆரம்பித்த பிறகு உள்ள எண்ணிக்கை ஆகும். அப்போது பருவ வயது அடைந்த ஆண்கள் மட்டுமே எஞ்சி இருந்தார்கள். இப்பொழுது கேள்வி என்னவென்றால், மூன்றாவது அறிவிப்பான 700 பேர் கொண்ட படை வீரர்கள் இருந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளதே அதுவும் சரியானது என்பதாகும். மூவாயிரத்தில் இருந்து 1200 ஆக எப்படி மாறியது என்று ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. இப்பொழுது பார்க்க வேண்டியது என்னவென்றால், 700 என்று கூறப்பட்டுள்ள அறிவிப்பும் சரியானதா? என்பதாகும். இதற்கான பதில் என்னவென்றால், இந்த அறிவிப்பு இப்னு இஸ்ஹாக் எனும் வரலாற்றாசிரியரால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர் மிகவும் நம்பத் தகுந்த வரலாற்றாசிரியர் ஆவார். மேலும் இப்னு ஹஸம் போன்ற மகத்துவ மிக்க ஆலிமும் கூட இவரை மிக வலுவாக உண்மைப்படுத்தி இருக்கிறார்கள். இவரை குறித்து நாம் சந்தேகம் கொள்ள முடியாது. இந்த அறிவிப்பும் சரியானதாகத் தான் இருக்கும். இதை இந்த வகையிலும் நாம் உண்மைப்படுத்த முடியும். அது என்னவென்றால், வரலாற்றை மேற்கொண்டு ஆய்வு செய்து பார்க்கும்போது நமக்கு தெரியவருவது என்னவென்றால், போரின் போது பனூ குறைழா (எனும் யூத கோத்திரம்) காஃபிர் படையுடன் சேர்ந்து கொண்டது. அவர்கள் திடீரென்று மதீனாவின் மீது தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய ரகசிய நோக்கத்தைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது, மதீனாவின் எந்த திசையில் பனூ குறைழா இருந்தார்களோ அந்த திசையையும் கண்காணிக்க வேண்டியது அவசியம் என்று அன்னார் (ஸல்) கருதினார்கள். முதலில் பனூ குறைழா தம்முடன் ஒற்றுமையாக இருக்கிறார்கள்; அவர்கள் எதிரியை இந்தப் பக்கமாக வர விட மாட்டார்கள் என்ற காரணத்தினால் அப்பகுதி கண்காணிக்கப்படாமல் விடப்பட்டிருந்தது. ஆனால், வரலாற்றில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், பனூ குறைழா உடைய துரோகத்தின் நிலை தெரிய வந்தபோது, அவர்கள் விலகிச் சென்றது தெரிய வந்தபோது, அவர்கள் ஏமாற்றியது தெரிய வந்த போது, அதற்கு முன்பு பனூ குறைழா மீது இருந்த நம்பிக்கையின் காரணமாக அவர்களின் கோட்டைகள் இருந்த பகுதியில் முஸ்லிம் பெண்கள் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். (இப்போது) பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தார்கள். பனூ குறைழாவுடைய துரோகம் தெரிய வந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் இப்போது முஸ்லிம் பெண்களின் பாதுகாப்பு அவசியம் என்று கருதினார்கள். முஸ்லிம்களிடமிருந்து இரு படைப்பிரிவுகளை பிரித்து பெண்களின் பாதுகாப்பிற்காக இரு பகுதிகளில் நியமித்தார்கள். மஸ்லிமா பின் அஸ்லம் அவர்களுக்கு 200 ஸஹாபிகளை கொடுத்து ஓரிடத்தில் நியமித்தார்கள். ஸைது பின் ஹாரிஸா அவர்களுக்கு 300 ஸஹாபிகளை கொடுத்து இன்னோரிடத்தில் நியமித்தார்கள். அவ்வப்போது கொஞ்ச நேரத்திற்கு பிறகு உரத்த குரலில் தக்பீர் கூறிக் கொண்டே இருக்க வேண்டும்; அதன் மூலமாக பெண்கள் பாதுகாப்பாக இருப்பது தெரிய வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள். அகழ்ப் போரில் 700 படை வீரர்கள் பங்கெடுத்தார்கள் என்று இப்னு இஸ்ஹாக் அவர்கள் ஏன் கூறினார்கள் என்ற சிக்கல் இந்த அறிவிப்பினால் தீர்ந்து விடுகின்றது. ஏனெனில், 1200 படை வீரர்கள் இருந்து 500 படை வீரர்கள் பெண்களின் பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்ட பிறகு 1200 படைவீரர்களுடைய எண்ணிக்கை இப்போது 700 ஆக மாறியிருந்தது. இவ்வாறு அகழ்ப் போரில் பங்கெடுத்த படைவீரர்களின் எண்ணிக்கையை குறித்து வரலாற்றில் காணப்படுகின்ற கருத்து வேறுபாடு தீர்க்கப்பட்டு விட்டது.

இணை வைப்பாளர்கள் மதீனா வந்தடைந்ததைக் குறித்தும் அதற்குப் பிறகுள்ள நிலைமைகளைக் குறித்தும் விபரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அபூ ஸுஃப்யான் அவர்களின் தலைமையில் மக்கத்து குறைஷிகள் மற்றும் இதர கோத்திரங்களைச் சேர்ந்த படை மதீனா வந்தடைந்தது. மதீனாவுக்கு அருகில் அவர்கள் முகாமிட்டார்கள். இதன் விவரத்தை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

குறைந்தபட்சம் 20 நாட்கள் அல்லது ஓர் அறிவிப்பின் அடிப்படையில் 6 இரவு 6 பகல் தொடர்ச்சியான உழைப்பின் விளைவாக இந்த நீண்ட அகழ் தோண்டும் பணி முழுமை அடைந்தது. இந்த அசாதாரண உழைப்பு மற்றும் கடுமையான பணி ஸஹாபிகளை முற்றிலும் களைப்படையச் செய்திருந்தது. ஆனால், இங்கோ (அகழ் தோண்டும்) பணி முழுமை அடைந்த நேரத்தில் யூதர்கள் மற்றும் அரேபியாவின் இணை வைப்பாளர்களுடைய பெரும்படை தம் எண்ணிக்கை மற்றும் ஆற்றலின் ஆணவ மிதப்பில் மதீனாவை வந்தடைந்தது. வந்தடைந்த உடனே முதலில் அபூஸுஃப்யான் உஹது மலையை நோக்கிச் சென்றார். ஆனால், அந்த இடம் காலியாகவும் வெறிச்சோடியும் கிடப்பதை பார்த்து விட்டு மதீனா நகர் மீது தாக்குதல் தொடுப்பதற்கு பொருத்தமான இடத்தை கண்டறிந்து அந்த திசையை நோக்கி முன்னேறினார். ஆனால், மதீனாவுக்கு முன்னால் அகழ் தோண்டப்பட்டிருந்தது. காஃபிர்களுடைய படை முன்னேறிச் சென்றபோது தம் வழியில் அகழ் தடையாக இருப்பதை கண்டு செய்வதறியாமல் திகைப்படைந்து விட்டது. ஆகவே அவர்கள் அகழை விட்டு விலகி திறந்தவெளியில் முகாம் அமைக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள். இன்னொரு புறமோ நிராகரிப்பாளர்களின் படை வந்தடைந்த செய்தி அறிந்து பெருமானார் (ஸல்) அவர்களும் 3000 முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு நகரை விட்டு புறப்பட்டார்கள். அகழுக்கு அருகில் வந்தடைந்து நகருக்கும் அகழுக்கும் இடையில் ஸலாஹ் மலையை தம் பின்புறத்தில் இருக்குமாறு பார்த்துக் கொண்டு முகாமிட்டார்கள். அகழ் அதிக அகலமானதாக இருக்கவில்லை. அதன் சில பகுதிகள் எப்படிப்பட்டதாக இருந்தனவென்றால், உறுதியான, சாதுரியமான படைவீரர் அதைத் தாண்டிச் சென்று நகரை நோக்கி முன்னேற இயலும். அதேபோன்று மதீனாவின் சில பகுதிகளில் அகழ் தோண்டப்பட்டிருக்கவில்லை. ஏனெனில், அங்கு வீடுகளும், தோட்டங்களும், ஒழுங்கற்ற முறையில் இருந்த மலைகளும் அங்கு தடைச் சுவர்களாக இருந்தன. அந்த பகுதிகளையும் பாதுகாப்பது அவசியமானதாக இருந்தது. ஏனெனில், எதிரி இந்த பக்கமாக வந்து வீடுகளுக்கு சேதத்தை ஏற்படுத்தியோ அல்லது வேறு ஏதேனும் நுட்பமான வழிமுறையை கையாண்டோ குறைந்த எண்ணிக்கை கொண்ட நபர்கள் வரிசையாக நகரின் மீது தாக்குதல் நடத்தி விடக் கூடாது என்பதற்காக. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளை பல்வேறு குழுக்களாகப் பிரித்து அகழுடைய பல்வேறு பகுதிகளிலும் மதீனாவின் மற்ற இடங்களிலும் காவல் காப்பதற்காக கண்காணிப்பு மையங்களை அமைத்தார்கள். இரவாக இருந்தாலும் சரி ; பகலாக இருந்தாலும் சரி; காவல் பணியில் இருக்கக் கூடிய இந்த குழு ஒருபோதும் கவனமற்று இருக்கக் கூடாது என்று வலியுறுத்தி கூறியிருந்தார்கள்.

இன்னொரு புறமோ அகழ் தடையாக இருந்ததன் காரணமாக திறந்தவெளியில் முறையாக போர் நடைபெறுவதற்கோ அல்லது நகரின் மீது தாக்குதல் நடத்துவதற்கோ சாத்தியம் இல்லாமல் இருப்பதை காஃபிர்கள் கண்டபோது, அவர்கள் மதீனாவை சுற்றி முற்றுகை அமைத்திருந்தார்கள். மேலும் அகழ் தோண்டப்பட்டிருந்த இடங்களில் பலவீனமான பகுதிகளை கண்டறிந்து அவற்றிலிருந்து பயன் பெறுவதற்கு சந்தர்ப்பங்களை தேடிக் கொண்டிருந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், அகழை தாண்டுவதில் எதிரிகள் தோல்வியடைந்த போது சூழ்ச்சிகளை கையாள துவங்கினார்கள். இதைப் பற்றிய விவரம் வரலாற்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: இணை வைப்பாளர்கள் மதீனாவை நாலாப்புறத்திலிருந்தும் முற்றுகையிட்டிருந்தார்கள்தான். ஆயினும், முழு முயற்சிக்குப் பிறகும் கூட அவர்களால் அகழுடைய எந்தப் பகுதியையும் தாண்ட முடியவில்லை. அதேபோன்று முஸ்லிம்கள்

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

மீது அவர்களால் பகிரங்கமாக தாக்குதலும் நடத்த இயலவில்லை. இந்த இயலாத, ஒன்றும் செய்ய முடியாத நிலையைக் கண்ட அபூஸுஃப்யானும் பனூ நழீர் கோத்திரத்தின் தலைவனான ஹுயய் பின் அக்தப் போன்றவர்களும் இன்னொரு சூழ்ச்சித் திட்டத்தை தீட்டினர். அது என்னவென்றால், மதீனாவிற்குள் இருக்கும் யூத கோத்திரமான பனூ குறைழாவிடம் சென்று, அவர்கள் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்துக் கொண்டு நம்முடன் அவர்களை இணையச் செய்து விட வேண்டும்; அவர்கள் உள்ளே இருந்து கொண்டு முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும். இதற்கு அவர்களை எப்படியாவது ஒப்புக் கொள்ள செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள். ஆகவே இந்த அபாயகரமான சூழ்ச்சியை செயல்படுத்துவதற்காக பனூ குறைழாவுடைய தலைவனான கஅப் பின் அஸத் க்ர்ஸீயிடம் ஹுயய் பின் அக்தப் சென்றான்.

ஆனால், ஹுயய் பின் அக்தப் வந்திருக்கும் செய்தியை கேள்விப்பட்ட போது கஅப் கோட்டையின் கதவுகளை மூடிவிட்டான். உள்ளே நுழைவதற்கு ஹுயய் அனுமதி கேட்டபோது கதவுகளை திறக்க முடியாது என்று கஅப் மறுத்து விட்டான். ஹுயய் பின் அக்தப் கஅபை நோக்கி உரத்த குரலில், கஅபே! உனக்கு அழிவு உண்டாகட்டும்! கதவை திறந்து விடு! என்று கூறினான். அதற்கு, ஹுயய்! நீ பேறிழந்தவன் ஆவாய்! ; நான் முஹம்மது (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கிறேன்; என்னால் அந்த உடன்படிக்கையை முறிக்க முடியாது. முஹம்மத் (ஸல்) அவர்களை எப்போதும் உண்மையாளராகவும் உடன்படிக்கையை பேணக் கூடியவராகவும் கண்டுள்ளேன் என்று கஅப் கூறினான்.

ஒருபுறம் கஅப் இவ்வாறு கூறினாலும் அடுத்து வரக் கூடிய சம்பவங்களில் பார்க்கும்போது அவன் மாறி இருந்தான்.

ஆனால், ஹுயய் பின் அக்தபோ, கஅபிடம், நீ கதவை திற ; நான் உன்னுடன் சில விஷயங்களை பேச வேண்டும் என்று கூறினான். அல்லாஹ்வின் மீது ஆணையாக!நான் கதவை திறக்க மாட்டேன் என்று கஅப் கூறினான். இவ்வாறு சிறிது நேரம் வரை வாக்குவாதம் நடந்த பிறகு கஅப் இறுதியில் கதவை திறந்து விட்டான்.

இறுதியில் கஅப் கோட்டை கதவுகளை திறந்தபோது ஹுயய் அவனிடம், உனக்கு அழிவு உண்டாகட்டும்! நான் உன்னிடம் காலத்தின் கண்ணியத்தையும், ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளைப் (போன்ற படையை)யும் கொண்டு வந்துள்ளேன். உன்னிடம் குறைஷியர்களின் தளபதிகளையும், தலைவர்களையும் கொண்டு வந்துள்ளேன் என்று கூறிவிட்டு, மதீனாவின் நாலாப்புறமும் முஸ்லிம்களை முற்றுகையிட்டிருந்த படையினரின் கோத்திரங்களை பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினான். முஹம்மத் (ஸல்) அவர்களையும், அவர்களின் தோழர்களையும் அழித்தொழிக்காத வரை இங்கிருந்து நாம் செல்லக் கூடாது என்று எங்களுக்குள் நாங்கள் பரஸ்பர உடன்படிக்கை செய்துள்ளோம்; எங்கள் வழியில் இந்த அகழ் தடையாக இல்லாதிருப்பின் நாங்கள் அதில் வெற்றியும் பெற்றிருப்போம் என்றும் அவன் கூறினான். இந்த அனைத்து விஷயங்களையும் கேட்ட பிறகும் கூட பனூ குறைழாவுடைய தலைவன் கஅப் உடன்படிக்கையை முறிப்பதற்க சம்மதிக்கவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ என்னிடம் காலத்தின் அழிவையும், நீர் இல்லாத மேகத்தையும் கொண்டு வந்துள்ளாய்; அதில் ஒன்றும் இல்லை. ஹுயய், உனக்கு அழிவு உண்டாகட்டும்! நீ என்னை என் நிலையிலேயே விட்டு விடு. ஏனெனில், முஹம்மத் (ஸல்) அவர்களை நான் எப்போதும் தம் வாக்கில் உண்மையாளராகவும், வாக்குறுதியை பேணக் கூடியவராகவும் கண்டுள்ளேன் என்று கஅப் கூறினான். பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம், வாக்குறுதியை பேணுவது ஆகியவற்றைக் குறித்து கஅப் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தான். அவர் எங்கள் மீது எவ்வித பலவந்தமும் செய்வது கிடையாது; அவர் எங்களுடைய மார்க்கத்தில் எவ்வித தலையீடும் செய்வது கிடையாது. அவர் எங்களுடைய நல்ல அயலார் ஆவார். ஆகவே நீ திரும்பி சென்று விடு!

முன்னதாக உங்களுக்கு நிகழ்ந்த அதே இழிவான நிலை எங்களுக்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்று கஅப் கூறினான். ஆனால், ஹுயய் கஅபை திசை திருப்ப முயற்சி செய்து கொண்டிருந்தான். எந்த அளவுக்கு என்றால், அவன் தன் குலத்திற்கும், பனூ கைனுக்காவிற்கும் ஏற்பட்ட துக்கங்களைக் குறித்தும் சிரமங்களை குறித்தும் எடுத்துக் கூறி இந்த அனைத்து துன்பங்களும், முஸ்லிம்களின் காரணமாகவே நமக்கு கிடைத்தது என்று கூறினான். இறுதியில் கஅபுடைய உள்ளத்தை இலகச் செய்வதில் வெற்றி பெற்று விட்டான். கஅபும் இறுதியில் அவனுடைய பேச்சில் விழுந்து விட்டான். அவனது இயல்பிலிருந்த உடன்படிக்கையை மீறுதல் எனும் விஷயம் அவனை மிகைக்க ஆரம்பித்தது. அவன் ஹுயயியிடம், அப்படியா. நான் உன் விஷயத்தை ஒப்புக் கொண்ட பிறகு முஹம்மத் (ஸல்) அவர்களை கொலை செய்ய முடியாமல் போனால், குறைஷியர்களும் ஃகத்ஃபான் கோத்திரத்தாரும் திரும்பிச் சென்று விட்டால் எங்களுக்கு என்ன ஆகும்? என்று கேட்டான்.

அதற்கு ஹுயய், நீ கவலைப்பட வேண்டாம்; அவ்வாறான நிலையில் நான் உன்னுடன் உன் கோட்டைக்குள் நுழைவேன் ; நீ எதிர்கொள்கின்ற துன்பங்களை நானும் எதிர்கொள்வேன் என்று கூறினான். இந்த அனைத் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இறுதியில் கஅப் பின் அஸது பெருமானார் (ஸல்) அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்து விட்டான். அந்த சந்தர்ப்பத்தில் கஅப் உடைய ஒரு தோழர் அம்ர் பின் சவ்தா என்பவர் அவருக்கு அறிவுரையும், புத்திமதியும் கூறினார். கஅபுடைய தீய நடத்தையைக் குறித்து அவனை அச்சுறுத்தினார். பெருமானார் (ஸல்) அவர்களுடைய உறுதியான உடன்படிக்கையை நினைவுப்படுத்தினார். நீர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை. அவரையும் அவருடைய எதிரிகளையும் (அவர்களின் நிலையில்) விட்டுவிடு. ஆனால், ஒப்பந்தத்தை முறித்தவாறு தாக்குதல் நடத்த வந்திருக்கும் எதிரிகளுடன் சேர்ந்து கொள்ளாதே என்று கூறினார். ஆனால், கஅப் இதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான்.

இந்த சூழ்நிலையை பார்த்த பனூ குறைழாவைச் சேர்ந்த நல்லியல்பு கொண்ட சில யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று இஸ்லாத்தை ஏற்றும் கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு பனூ குறைழா ஒப்பந்தத்தை முறித்த செய்தி கிடைத்தபோது, அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஅது பின் முஆஸ் மற்றும் ஸஅது பின் உபாதா ஆகியோரை அனுப்பி வைத்தார்கள். இவ்விருவரும் தம் சமுதாயத்தின் தலைவராக இருந்தார்கள். இந்த இருவருடன் அப்துல்லாஹ் பின் ரவாறா பின் ஜுபைர் ஆகியோரையும் அனுப்பி வைத்தார்கள்.ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அவர்களுடன் உஸைது பின் ஹுஸைர் அவர்களையும் அனுப்பி வைத்தார்கள் என்று வருகிறது. அந்த குழுவிடம், நீங்கள் செல்லுங்கள் அந்த சமுதாயத்தைக் குறித்து நமக்கு கிடைத்த தகவல் உண்மையானதா? இல்லையா? என்று அறிந்து வாருங்கள். இந்த செய்தி உண்மையாது என்றால் மக்களுக்கு முன்னால் அந்த செய்தியை நீங்கள் கூற வேண்டாம். மாறாக, அந்த செய்தி உண்மையானது என்று நான் அறியும் வகையில் சூசகமாக கூறுங்கள். யூதர்கள் உடன்படிக்கையில் நிலைத்திருக்கிறார்கள் என்றால் இந்த செய்தி பொய்யானது என்றால் இதை பகிரங்கமாக எல்லாருக்கும் முன்னாலும் கூறுங்கள் என்று கூறினார்கள். இந்தக் குழு பனூ குறைழாவிடம் சென்றது. அங்கு கஅபிடமும் அவனுடைய தோழர்களிடமும் பேசியது. அவர்கள் நடந்து கொண்ட விதமே வேறு மாதிரியாக இருந்தது.

நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் ஒப்பந்தம் செய்திருக்கின்றீர்களே என்று கஅபிடம் கூறப்பட்டபோது, அவன் மிகவும் ஏளனமாக எந்த தூதுர் ? என்று கேட்டான். எவரிடமும் நாம் ஒப்பந்தம் செய்யவில்லையே, செருப்பின் வாரை முறிப்பது போன்று நான் இந்த ஒப்பந்தத்தை முறித்து விட்டேன் என்று கூறினான். அறிவிப்பில் வருகிறது: அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் சார்பாக கடுமையான சொற்களும் கூறப்பட்டன.

எவ்வாறு இருப்பினும், இந்த குழு திரும்பி வந்தது. சூசகமாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறியது. நரம்புகளை தளர்ச்சி அடைய செய்யக் கூடிய, உணர்வுகளை இழக்கச் செய்யக் கூடிய இவ்வாறான சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் கொஞ்ச நேரம் வரை மௌனமாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) மீது எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் சாதாரண மனிதன் துவண்டு போய் விடுவான். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களோ,

أَبْشِرُوْا يَا مَعْشَرَ الْمُؤْمِنِيْنَ
بِنَصْرِ اللهِ تَعَالٰى وَعَوْنِهٖ

(நம்பிக்கை கொண்டோரின் ஜமாஅத்தே! அல்லாஹ்வின் உதவி மற்றும் ஆதரவைக் கண்டு மகிழ்ச்சி அடையுங்கள்) என்று கூறினார்கள். ஒருநேரம் வரும்; அப்பொழுது நான் கஅபாவை வலம் வந்து கொண்டிருப்பேன். அதனுடைய திறவுகோல்கள் என் கைகளில் இருக்கும். கிஸ்ராவும், கைஸரும் நிச்சயமாக அழிந்து போவார்கள். அவர்களின் செல்வங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யப்படும். உறுதியாக நான் இவற்றை நம்புகிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் பனூ குறைழாவுடைய துரோகத்தை குறித்து

எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்கள்: அபூஸூஃப்யான் செய்த தந்திரம் என்னவென்றால், யூத கோத்திரமான பனூ நழீருடைய தலைவன் ஹுயய் பின் அக்தப் இடம் அவன் இரவின் இருளில் மறைந்தவாறு பனூ குறைழாவுடைய கோட்டைகளை நோக்கி சென்று அவர்களின் தலைவன் கஅப் பின் அஸதை சந்தித்து பனூ குறைழாவை நம்முடன் இணைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கூறி இருந்தார். ஹுயய் பின் அக்தப் சந்தர்ப்பம் பார்த்து கஅபுடைய இடத்தை சென்றடைந்தான். ஆரம்பத்தில் கஅப் அவனுடைய பேச்சை கேட்க மறுத்து விட்டான். முஹம்மது (ஸல்) அவர்களுடன் எங்களுக்கு உடன்படிக்கை; ஒப்பந்தம் ஆகியவை ஏற்பட்டுள்ளது. முஹம்மது (ஸல்) அவர்கள் எப்பொழுதும் தம் உடன்படிக்கை, ஒப்பந்தங்களை பேணக் கூடியவராக இருந்துள்ளார்கள். ஆகவே நான் அவர்களுடன் துரோகம் செய்ய இயலாது என்று கூறினார். ஆனால் ஹுயய் பின் அக்தப் அவனுக்கு எப்படிப்பட்ட பேராசைகளை ஏற்படுத்தினான் என்றால், இஸ்லாம் வெகு விரைவில் அழிந்து விடும் என்று உறுதியாக நம்பச் செய்தான். இஸ்லாத்தை அழிக்காத வரை நாங்கள் மதீனாவில் இருந்து திரும்ப மாட்டோம் என்று உறுதி கொண்டுள்ளோம் என்று கூறினான். அவன் தம் விஷயங்களை எந்த அளவு திறம்பட எடுத்துக் கூறினான் என்றால், இறுதியில் கஅப் ஒப்புக் கொண்டு விட்டான். இவ்வாறு பனூ குறைழாவுடைய ஆற்றலும் அந்தப் பக்கமாக இணைந்து கொண்டது. அதாவது, காஃபிர்களின் எண்ணிக்கை ஏற்கனவே மிகவும் அதிகமாக இருந்தது. யூதர்கள் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதன் விளைவாக அதில் பனூ குறைழாவுடைய ஆற்றலும் சேர்ந்து கொண்டது.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பனூ குறைழா உடைய இந்த அபாயகரமான துரோகம் தெரிய வந்தபோது, அன்னார் (ஸல்) ஆரம்பத்தில் இரண்டு, மூன்று முறை ஸுபைர் பின் அவாம் அவர்களிடம், மறைவாக நிலைமையை கண்டறிந்து வருமாறு அனுப்பி வைத்தார்கள். அதற்குப் பிறகு, வெளிப்படையாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய கோத்திரங்களின் தலைவர்களான ஸஅது பின் முஆஸ் மற்றும் ஸஅது பின் உபாதா ஆகியோரையும், செல்வாக்குள்ள மற்ற சில ஸஹாபிகளையும் பனூ குறைழாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஏதேனும் கவலை அளிக்கும் செய்தி என்றால், திரும்பி வந்து அதை பகிரங்கமாக வெளிப்படுத்தி விட வேண்டாம். மாறாக சூசகமாக அதைக் கூறுங்கள். மக்களிடத்தில் பதற்றம் ஏற்பட்டு விடக் கூடாது என்று வலியுறுத்தி கூறியிருந்தார்கள். இந்த குழு பனூ குறைழா உடைய தங்குமிடத்தை அடைந்து அவர்களின் தலைவன் கஅப் பின் அஸதை நெருங்கிய போது அந்த பேறிழந்தவன் மிகவும் ஆணவமான முறையில் சந்தித்தான். இரு ஸஅதுகள் சார்பாகவும் ஒப்பந்தத்தை குறித்து நினைவூட்டப்பட்டபோது அவனுடைய குலத்தார் ஆணவத்துடன், நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். எங்களுக்கும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் இடையில் எவ்வித ஒப்பந்தமும் இல்லை என்று கூறினார்கள். இந்த சொற்களை கேட்டுவிட்டு ஸஹாபிகளின் அந்த குழு அங்கிருந்து எழுந்து வந்தது. ஸஅது பின் முஆஸ் மற்றும் ஸஅது பின் உபாதா ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி பொருத்தமான முறையில் அன்னாருக்கு நிலைமையைப் பற்றிய தகவல் அளித்தார்கள்.

அந்நியர்களின் பேச்சைக் கேட்டுவிட்டு நம்முடைய சில இளைஞர்களும் கேள்வி கேட்கின்றனர். அதாவது அந்த சந்தர்ப்பத்தில் பனூ குறைழா மீது ஏன் அநீதி இழைக்கப்பட்டது? என்று கேட்கின்றனர். அவர்கள் உடன்படிக்கையை முறித்தார்கள்; ஆகவே அவர்களுக்கு அதற்கான தண்டனை வழங்கப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் சார்பாக அம்மக்கள் மீது எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லை.

எவ்வாறு இருப்பினும், இதைப் பற்றி மேற்கொண்டு விபரங்களும் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இன்ஷா அல்லாஹ் இனி வரக் கூடிய காலத்தில் அது எடுத்துக் கூறப்படும்.

இன்று குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாவும் ஆரம்பமாகின்றது. காதிம்கள் இதிலிருந்து முழுமையாக பயனடைய முயற்சி செய்யுங்கள். ஒருவேளை தொடர்ச்சியாக மழை பெய்து வரலாம் என்று வானிலை குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அருள் புரிவானாக! அவர்களின் நிகழ்ச்சிகள் நல்லபடியாக நடக்கட்டுமாக!இந்நாட்களில் காதிம்களின் ஆன்மிக மற்றும் மார்க்கக் கல்வியின் தரங்களை அதிகரிப்பதற்கும் முயற்சி செய்யுங்கள். எந்த துஆக்களின் பக்கமும், துரூத் ஓதுவதின் பக்கமும் நான் கவனமூட்டினேனோ அதன் பக்கமும் இந்நாட்களில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். மேலும் எப்பொழுதும் அதை ஓதி வாருங்கள். எல்லாவிதமான ஷைத்தானிய தாக்குதல்களிலிருந்தும் அல்லாஹ் எல்லாரையும் காப்பாற்றுவானாக!

இன்று சில ஜனாஸா காயிப் தொழுகையையும் நான் தொழ வைப்பேன். அவர்களைப் பற்றிய குறிப்பையும் எடுத்துக் கூறி விடுகின்றேன். முதல் குறிப்பு ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஹபீபுர் ரஹ்மான் ஸீர்வி ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 73 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்திருந்தார்கள். இவர்களின் தந்தை பெயர் சூஃபி குதா பக்ஷ் ஸீர்வி ஆகும். இவர்களின் குடும்பத்தில் இவர்களின் தந்தை சூஃபி குதா பக்ஷ் ஸீர்வி அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் 1928-ம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கரத்தில பைஅத் செய்யும் நற்பேறு பெற்றார்கள். ஹபீபுர் ரஹ்மான் ஸீர்வி ஸாஹிப் அவர்கள் ஆரம்பக் கல்வியை கற்ற பிறகு பஞ்சாப் யூனிவர்சிட்டியில் லைப்ரேரி ஸயின்ஸில் எம்எஸ் ஸி படித்தார்கள். 1981-ம் ஆண்டில் வாழ்வை அர்ப்பணித்தார்கள். அவர்களின் வக்ஃப் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிறகு இவர்கள் 1981-இல் assistant librarian ஆக நியமிக்கப்பட்டார்கள்.

பிறகு மூன்று, நான்கு வருடங்கள் வரை கிலாஃபத் லைப்ரேரி உடைய இன்சார்ஜ் ஆகவும் தொண்டாற்றக் கூடிய நற்பேறைப் பெற்றார்கள். பிறகு நஸாரத் இஷாஅத்தில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிறகு தாஹிர் ஃபவுண்டேஷனில் நியமிக்கப்பட்டார்கள். அப்போது இவர்கள் நாயிப் நாஸிர் தீவான் ஆக தொண்டாற்றும் நற்பேறைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் பல்வேறு தொண்டுகளை செய்யக் கூடிய நற்பேறைப் பெற்றிருக்கின்றார்கள். முஹ்தமிம் ஆகவும் தொண்டாற்றி இருக்கின்றார்கள். அன்ஸாருல்லாஹ் அமைப்பிலும் மார்கஸீ காயித் ஆக தொண்டாற்றும் நற்பேறை பெற்றிருக்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களால் எடுத்துரைக்கப்பட்ட பல்வேறு விஷயங்களை பல்வேறு நூல்களிலிருந்து ஒன்று திரட்டி மிகவும் உழைப்புடன் ஒரு நூலையும் இவர்கள் தொகுத்து இருக்கின்றார்கள். அது, தத்காரே மஹ்தி எனும் பெயரில் வெளியிடப்பட்டு விட்டது. அத்துடன் பல நூல்களிலும் இவர்கள் பணியாற்றி இருக்கின்றார்கள். அவற்றுள் சில (வெளியீட்டின்) பல்வேறு நிலைகளில் உள்ளன.

அல்லாஹ் இவர்களுக்கு ஒரு மகனையும், இரு மகள்களையும் வழங்கியுள்ளான். கிலாஃபத்துடன் பெரும் தொடர்பு இருந்தது. மிகவும் அமைதியானவர். தாம் உண்டு; தம் வேலை உண்டு என்று இருப்பவர். அவரிடத்தில் என்ன தொண்டு ஒப்படைக்கப்பட்டாலும் அதை நல்ல விதமாக நிறைவேற்றக் கூடியவர். எப்பொழுதும் வக்ஃப்க்கான உரிமையை செலுத்தியுள்ளார். மிகவும் அர்ப்பணிப்போடு பணியாற்றி இருக்கின்றார். எளிதாக பழகக்கூடியவரும், இனிமையானவரும் ஆவார். அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களின் நன்மைகளில் நிலைத்திருக்கக் கூடிய நற்பேறை வழங்குவானாக!

இரண்டாவது நற்குறிப்பு டாக்டர் ஸய்யது ரியாஸுல் ஹஸன் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்திருந்தார்கள். பிரிகேடியர் டாக்டர் ஸியாவுல் ஹஸன் ஸாஹிபுடைய மகன் ஆவார்கள்.

மர்ஹூம் அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். டாக்டராக தொண்டாற்றி வந்தார்கள். சிறு வயது முதலே ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்துள்ளார்கள். மஜ்லிஸ் நுஸ்ரத் ஜஹான் இன் கீழ் ஏறக்குறைய கேம்பியா மற்றும் பாகிஸ்தானில் முழுமையான முறையில் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள். கென்யாவில் பல வருடங்களாக தொண்டாற்றிய பிறகு ஸ்பெஷலைஷேஷன் மற்றும் ஜெனரல் சர்ஜன் பயிற்சிக்காக கென்யாவிலிருந்து பாகிஸ்தான் செல்வதற்கு அனுமதி கேட்டார்கள். பல மெடிக்கல் டிப்ளமோ மற்றும் ஸர்டிபிகேட் பெற்றுள்ளார்கள். இவர்கள் மெடிக்கல் யூனிவர்சிட்டியில் மருத்துவர்களுக்கு உடற்கூறியல் கற்றுக் கொடுப்பதற்கும் நற்பேறு பெற்றுள்ளார்கள். நல்ல தகுதி வாய்ந்த மருத்துவர் ஆவார்கள். கேம்பியாவின் உள்ளூர் மாணவர்களுக்கு பொருளாதார உதவி செய்து வந்தார்கள். அவர்களின் கல்விக்காக உதவி செய்வார்கள். வேலை தேடுவதில் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். ஏழைகள் மற்றும் தேவையுடைய நபர்களுக்கு பொருளாதார உதவி செய்வதற்கு எந்நேரமும் ஆயத்தமாக இருப்பார்கள். அவர்களிடம் காணப்பட்ட ஒரு

தனிச்சிறப்பு என்னவென்றால் மிகவும் துஆ செய்யக் கூடியவராகவும் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். இளமைப் பருவத்தில் இருந்தே தஹஜ்ஜுத் தொழக் கூடிய பழக்கம் இருந்தது. அவர்களை அறிந்தவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்: மிக எளிதில் பழகக் கூடியவரும், நோயாளிகள் மீது உண்மையான அனுதாபம் காட்டக் கூடியவராகவும், பரிவு காட்டக் கூடியவராகவும், நேசிக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். உழைப்பாளியாகவும், உத்வேகம் கொண்டவராகவும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்ட மனிதராகவும் திகழ்ந்தார்கள். துஆ செய்யக் கூடியவராகவும், மக்கள் மீது பரிவு காட்டக் கூடியவராகவும் இருந்தார்கள். அவர்களுடைய இயல்பில் மிக அதிகமான பணிவும் தொண்டு செய்வதற்கான அளவற்ற ஆர்வமும் இருந்தது. மிகவும் இனிமையான பண்புகளை கொண்டவராக இருந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

மூன்றாவது நற்குறிப்பு ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் அப்துல் ஜலீல் ஸாதிக் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாட்களில் 80 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களும் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூம் அவர்கள், ரப்வாவைச் சேர்ந்த குறைஷி கனீ ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்களின் குடும்பத்தில் கோலிக்கி, குஜ்ராத் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்களின் பாட்டனார் ஹஸ்ரத் மியான் குத்புதீன் ஸாஹிப் அவர்கள் மூலமாகவும், டேரா ஃகாஸி கான் உடைய அமீர் ஜமாஅத்தாக இவர்களின் தாய்வழி பாட்டனார் ஹஸ்ரத் மௌலவி முஹம்மது உஸ்மான் ஸாஹிப் மூலமாகவும் அஹ்மதிய்யத் வந்தது.

ஜலீல் ஸாதிக் ஸாஹிப் அவர்கள் பொலிட்டிக்கல் ஸைய்ன்ஸ் எம்.ஏ படித்துள்ளார்கள். பிறகு 1964-ற்கு பிறகு ஆங்கிலத்தில் எம்.ஏ முடித்தார்கள். பிறகு முறையாக தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் ஆங்கிலத்துறையில் நியமிக்கப்பட்டார்கள். தொடர்ச்சியாக 39 ஆண்டுகள் வரை ஆசிரியர் பணியில் தொண்டாற்றி வந்துள்ளார்கள்.

நானும் கல்லூரி படிக்கும் போது அவர்களுடைய மாணவனாக இருந்துள்ளேன்.

மிக அமைதியானவர்; அன்பாக கற்றுக் கொடுக்கக் கூடிய ஆசிரியராக இருந்தார். மாணவர்களுடன் மிகவும் நல்ல தொடர்பு இருந்தது. மாணவர்களுக்கு கண்ணியம் அளிக்கக் கூடியவராக இருந்தார். ஓய்வு பெற்ற பிறகு 2003-ல் அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். அவர்கள் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் தர்பிய்யத் மற்றும் ரெக்கார்டு துறையின் இன்சார்ஜ் ஆக நியமிக்கப்பட்டார்கள். அங்கு அவர்கள் நாயிப் நாஸிராக பணியாற்றி வந்தார்கள். பல்வேறு இடங்களில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முஹ்தமிம் ஆக தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

பாகிஸ்தானுடைய சுகாதாரத்துறையின் சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். பிறகு 1983-ல் மர்கஸீ கஸாவில் பாகிஸ்தானுடைய காஸியாகவும் இருந்துள்ளார்கள். தம் வட்டாரத்தின் தலைமைப் பொறுப்பு வகிக்கக் கூடிய நல்வாய்ப்பையும் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு இரு மகள்களும், ஒரு மகனும் இருக்கின்றனர். மர்ஹூமைக் குறித்து எழுதக்கூடியவர்கள் பின்வருமாறு எழுதி இருக்கின்றனர்:

எழுதக் கூடியவர்கள் மிகவும் சரியாகத்தான் எழுதி இருக்கிறார்கள்: மிகவும் நல்லியல்பு கொண்டவராகவும், இறை நேசருடைய பண்பைக் கொண்ட மனிதராகவும் இருந்தார்கள். பெரும்பாலும் அமைதியாக இருப்பதை விரும்புவார்கள். ஆனால், எப்பொழுது பேசினாலும் புரிந்து உணர்ந்து பேசுவார்கள். அளந்து பேசியது போன்று பேசுவார்கள். பிறருடைய வேலையில் தேவையின்றி தலையிட மாட்டார்கள். எங்கு தேவை இருக்குமோ அங்கு நல்ல ஆலோசனையை வழங்குவார்கள். நல்ல பணிகளை ஊக்குவிப்பார்கள். எப்பொழுதாவது எவரிடமிருந்தாவது ஏதேனும் துன்பம் ஏற்பட்டிருந்தால் அதைப் பற்றி முறையிட மாட்டார்கள். மிகவும் பொறுமைசாலியும், நன்றி செலுத்தக் கூடியவரும், போதும் என்ற உள்ளம் படைத்தவரும் ஆவார்கள். தேவை உடைய மக்களுக்கு அமைதியாக, மறைவாக, நிரந்தரமாக பொருளாதார உதவி செய்து வந்தார்கள். கிலாஃபத்துடன் பெரும் ஆழமான தொடர்பு இருந்தது.முறையாக கடிதம் எழுதி வந்தார்கள். இவர்களின் குடும்பத் தொடர்புகளும் மிகவும் நல்ல விதமானதாக இருந்தன. வீட்டில் மனைவிக்கும் பெற்றோருக்கும் தொண்டாற்றக் கூடியவராக இருந்தார்கள். அவர்களின் உரிமையை செலுத்தக் கூடியவராக இருந்தார்கள். இன்னும் கூறுவதென்றால், மர்ஹூமுடைய சகோதரர் எழுதுகிறார்:

மர்ஹூம் அவர்கள் சகோதர, சகோதரிகளையும் நன்கு கருத்தில் கொண்டார்கள். அவர்களுக்கு தொண்டாற்றுவதை பெரும் கடமையாக கருதி வந்தார்கள்.

அடுத்த நற்குறிப்பு ஜங்க் (Jang) ஐச் சேர்ந்த மதிப்பிற்குரிய மாஸ்டர் முனீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 82 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களும் அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர்களின் தந்தை மியான் குலாம் முஹம்மது ஸாஹிப் அவர்கள் 1930-ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். மாஸ்டர் ஸாஹிப் அவர்கள் பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அன்ஸாருல்லாஹ் அமைப்பில் 40 வருடங்கள் தொண்டாற்றக் கூடிய நற்பேறைப் பெற்றுள்ளார்கள். ஜங்க் மாவட்டத்தின் மாவட்ட காயிதாகவும், மாவட்ட நாஸிம் ஆகவும் இருந்துள்ளார்கள். பிறகு செநியூட் மவாட்டம் உருவானபோது அங்கும் இவர்கள் தொண்டாற்றி இருக்கின்றார்கள். மிகவும் தூய, அர்ப்பணிப்புள்ள, ஜமாஅத்தின் தொண்டராக இருந்துள்ளார்கள். மக்களுக்கு பயன் அளிக்கக் கூடிய மனிதராக இருந்துள்ளார்கள்.

ஜங்க் உடைய பிரைமரி ஸ்கூல் ஆசிரியராக பணியாற்றி வந்தார்கள். இவருக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மர்ஹூமுக்கு பெரும் கண்ணியமும், மதிப்பும் அளித்து வந்தார்கள்.மக்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய மனிதராக இருந்தார்கள். அரசாங்க அலுவலகங்களுக்கு செல்லக் கூடிய மக்களுக்கு, குறிப்பாக அஹ்மதிகளுக்கும் இவர்கள் பயன்பட்டு வந்தார்கள். பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வது மட்டுமின்றி அவர்களை தம் வீட்டுக்கு அழைத்து வந்து விருந்தோம்பலும் செய்வார்கள். பொதுமக்களுடன் உள்ள தொடர்பு மிகவும் பரந்ததாக இருந்தது. அந்த அனைத்து தொடர்புகளையும் ஜமாஅத் மற்றும் ஜமாஅத் மக்களுக்கு தொண்டாற்றுவதற்காக பயன்படுத்தி வந்தார்கள். சுயநலத்திற்காக பயன்படுத்தவில்லை. அஹ்மதி சிறைவாசிகள் ஆக இருந்தாலும் சரி; அல்லது ஜமாஅத் அல்லாத சிறைவாசிகளாக இருந்தாலும் சரி; அவர்களின் நலனுக்காகவும், தொண்டுக்காகவும் நன்கு பயன்பட்டு வந்தார்கள்.

சிறைக் கூடங்களின் அதிகாரிகளுடன் இவருக்கு தனிப்பட்ட மரியாதையுடனான தொடர்பு இருந்தது. அதை இவர்கள் ஜமாஅத்தின் சிறைவாசிகளின் நலனுக்காக பயன்படுத்தி வந்தார்கள். சிறைக் கூடங்களில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக இவர்களுக்கு விரிவான தொடர்பும் இருந்தது. நாங்கள் ஜெயிலில் இருந்த போது அந்த காலகட்டத்தில் எனக்கும், என்னுடைய தோழர்களுக்கும் பெரும் தொண்டாற்றி இருக்கின்றார்கள். ஜெயிலர்களுடன் இருந்த தனிப்பட்ட தொடர்பின் காரணமாக எங்களுக்கு சில பெரும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அது பொதுவாக கைதிகளுக்கு கிடைப்பதில்லை. அல்லாஹ்வின் அருளால் எந்த ஒரு தனிப்பட்ட நபருக்காகவும் தொண்டு செய்யக் கூடியவராக இருக்கவில்லை. மாறாக, அவர் ஏழை அஹ்மதியாக இருந்தாலும் சரி; அல்லது வசதி படைத்தவராக இருந்தார் சரி ; ஒவ்வொருவருக்கும் தொண்டு செய்வதற்காக எல்லா நேரமும் ஆயத்தமாக இருப்பார்கள். பொதுவாகவும், கைதிகளின் நலனுக்காக பணியாற்றி வந்தார்கள். காதியானுடனும் அவர்களுக்கு மிகவும் நேசம் இருந்தது. ஏறக்குறைய ஒவ்வொரு வருடமும் அவர்கள் காதியானுக்கு செல்வார்கள். அங்கு டியூட்டியும் கொடுப்பார்கள். தம் மாவட்டத்தில் தலைமையக பிரதிநிதிகள் சுற்றுப்பயணம் செய்யும்போது அங்கும் அவர்களுடன் முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பார்கள். 1988-ல் இவர்கள் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. பிரசுரம் விநியோகம் செய்தது தொடர்பாக. ஆனால், எவ்வாறு இருப்பினும் பிறகு அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்துகளை உயர்த்துவானாக! மர்ஹூமுக்கு சந்ததி கிடையாது.

தமிழாக்கம்
மவ்லவி APA. தாரிக் அஹ்மத்

* * * * * * * * *

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களின்**

## ஐரோப்பிய சுற்றுப் பயணம் - ஜெர்மனி

நீங்கள் உங்களது கல்வியால் ஆன்மாவின் ஆரோக்கியத்திற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். மற்ற மார்க்கங்களின் போதனைகளை கற்றுக் கொண்டு இஸ்லாத்தின் சிறப்புகளையும், போதனைகளையும் நீங்கள் மக்களுக்கு கூற வேண்டும். நீங்கள் இந்த நகரம் மற்றும் இந்த நாட்டில் இஸ்லாத்தின் தூதுவர்கள் ஆவீர்கள்

உலகை அழிவிலிருந்து எப்படி பாதுகாக்க வேண்டும்? ஒன்று, உலகியல் அல்லது அரசியல் முயற்சிகள் இருக்கின்றன. அதில் நாம் அமைதி, நேசம், அன்பு ஆகியவற்றிற்கான தூதுச் செய்தியை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்

ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற ஒரு முபல்லிஃக், ஒரு முரப்பி ; அவர் உலகிற்கு அல்லாஹ்வின் இருப்பைப் பற்றிய உணர்வை ஏற்படுத்த வேண்டும். இறைவனுக்கு அருகில் மக்களை கொண்டு வருவதற்கான உங்களது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்

நமது ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு செயலையும் வல்ல இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு இதயத்தில் உருவாகாத வரை உலகில் அமைதியையும், நீதியையும், நேசத்தையும் நிலை பெறச் செய்ய முடியாது. எனவே நீங்கள் எங்கு உலகிற்கு இந்த உணர்வை ஏற்படுத்த உங்களது முயற்சிகளை செய்வீர்களோ அங்கு எல்லாவற்றையும் விட முதலில் நீங்கள் உங்களை அந்த உணர்வு மற்றும் பொறுப்பிற்கு தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும்

நீங்கள் வல்ல இறைவனுடன் உங்களது தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் உண்மையான வடிவில் மற்றவர்களுக்கு கூறமுடியும். இறைவன் யார்? இறைவனது போதனை என்ன? இறைவனுக்கு தனது படைப்பினத்துடன் எவ்வளவு நேசம் இருக்கின்றது? என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்

(ஜாமிஆ மாணவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய முக்கிய அறிவுரைகள்)

### ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் புதிய கட்டடத்திற்கான திறப்பு விழா நிகழ்ச்சி & ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரை

ஜெர்மனி அமீர் ஸாஹிப் அவர்களின் சொற்பொழிவிற்கு பிறகு ராயேட் ஷெடேட் நகரத்தின் மேயர் Mr.Werner Amend தமது உரையை முன்வைத்தவாறு கூறினார்:

கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! முதலில் நான் இந்த ஆக்கப்பூர்வமான பணிக்காக நன்றி செலுத்த விரும்புகிறேன். நான் இது தொடர்பாக முன்னாள் மேயருக்கும் நன்றி செலுத்த விரும்புகிறேன். ஏனெனில், அவர்கள் தமது காலத்தில் இந்த பணியை துவங்கியிருந்தார்கள். பின்னர் நான் அதனை முன்னெடுத்து இருந்தேன்.

இன்றைய இந்த நாளும், இன்றைய இந்த நிகழ்ச்சியும் சாதாரணமானது அல்ல. இன்னும் கூறப்போனால், நமது நகரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஒரு நாடு; அதில் வசிப்பவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர்; அதில் முஸ்லிம்களுக்கான இமாம்களை தயார்படுத்தும் (கல்வி) நிறுவனத்தை திறப்பது ஒன்றும் சாதாரண விஷயம் கிடையாது. மேலும், ஜெர்மனியில் இந்த விஷயம் வழக்கமான நடைமுறைக்கு மாற்றமானதாகும். தற்போது, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டில் பல்கலைக்கழகங்களிலும் இஸ்லாமியக் கல்வியை பயிற்றுவிப்பது துவங்கப்பட்டு விட்டது. ஆனால், இந்த நிறுவனத்தின் அந்தஸ்து அதைக் காட்டிலும் மிகவும் உயர்வானது ஆகும். இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிறுவனம் ஆகும். மேலும் நமது நாட்டில் இதுபோன்ற நிறுவனம் முதலாவது ஆகும். இதற்கு இணையான ஒரு நிறுவனம் முழு ஐரோப்பாவிலும் லண்டனில் மட்டுமே இருக்கின்றது. மேலும் அதுவும் அஹ்மதிய்யா ஜமாஅத்துடையது ஆகும். மேலும், ஒப்புமையின் அடிப்படையில் பார்ப்பதாக இருந்தால், லண்டன் யூ.கே நாட்டின் தலைநகரமாகும். மேலும் அங்கு 8.2 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். நமது ரெட்ஷேட் நகரத்தில் மக்கள் தொகையின் எண்ணிக்கை வெறும் 22 ஆயிரம் ஆகும்.

இந்த திறப்பு விழாவிற்கு பிறகு ரெட்ஷேட் நகரம் ஜெர்மனி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு ஒருவகையில், தலைமையக அந்தஸ்தை பெற துவங்கிவிடும். இந்த நிறுவனம் என்பது கல்வி பயில்வதற்கானது ஆகும். மார்க்க ஆராய்ச்சிக்கானது ஆகும். மேலும் கல்வியை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கானது ஆகும். மேலும், இந்த நிறுவனம் மார்க்கம் மற்றும் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கக் கூடியதாகும். ஏனெனில், பரஸ்பர உரையாடலும், பேச்சும் எந்த அளவிற்கு அவசியமானதாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு அது பரவலாக இல்லை என்பது ஓர் உண்மைத்துவம் ஆகும்.

முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கிடையில் மிகவும் குறைந்த அளவிலான தொடர்பே இருக்கின்றது. தற்போது நமக்கு ஒருவர் மற்றவருடைய கலாச்சாரம் மற்றும் மார்க்கத்தைக் குறித்து அதிக ஞானம் இல்லை. ஒருவர் மற்றவருடைய சடங்குகளையும், மரபுகளையும் அறிவதில்லை. அறியாமல் இருப்பது என்பது இந்த அளவிற்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்தும் விஷயம் அல்ல. அதாவது ஒருவருக்கு ஒரு விஷயத்தைப் பற்றி தெரியவில்லை ; அது வேதனைக்குரியது ஆகும் என்ற அளவில் மட்டும் இல்லை. மாறாக, (ஒருவர் மற்றவரை) அறியாமல் இருப்பது என்பது தப்பெண்ணத்தை பிறக்கச் செய்கின்றது. மேலும் தவறான தாக்கங்களையும் கூட விளைவிக்கின்றது. பின்னர் அதன் அடிப்படையில் பிரிவினையையும், தொடர்பற்றத் தன்மையையும் அது விளையச் செய்கின்றது.

இன்று, நாம் இந்த நிறுவனத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியை கொண்டாடி வருகின்றோம். இது ஒரு வடிவில் உங்களுடைய வீட்டிற்கான அந்தஸ்தை கொண்டிருக்கிறது. எவர் வீடு கட்டுகின்றாரோ அவர் அங்கு வசிக்கின்றார். அதாவது நீங்கள் ஜெர்மனியில் ரெட்ஷெட்டில் ஒரு வீடு கட்டியுள்ளீர்கள்; எனவே இன்றைய இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் ஒருவர் மற்றவரிடமிருந்து முகம் திருப்புவதற்கு பகரமாக ஒருமைப்பாட்டிற்கான ஓர் அடையாளமாக காண்கின்றேன். ரெட்ஷெட், ஷிடாக் ஷெட் மற்றும் நமது அண்டை நகரமான பேஸ்ஹைம் போன்றவை இருக்கின்றன. அந்த நகரத்தின் பிரதிநிதிகளாக எனது தோழர்களாகிய தோமாஸ், ரைஷல் மற்றும் தோமாஷ் ஆகியோர் இங்கு இருக்கின்றனர். அவர்களின் சார்பாகவும் நான் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன். ஒரு நீண்ட கால கட்டுமானக் காலத்திற்கு பிறகு நீங்கள் உங்களுடைய இந்த இலக்கை அடைந்துள்ளீர்கள். எனது நல்விருப்பங்கள் உங்களுடனும், குறிப்பாக மாணவர்களுடனும் இருக்கின்றன. அவர்கள் அருட்களை பெறக் கூடியவர்களாகவும், மேலும் இன்றைய நாளின் அடிப்படையில் நான் உங்களுக்கு இந்த ஷீல்டை இந்த நகரத்தின் அடையாளத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஆக, மேயர் ஸாஹிப் தனது இந்த சொற்பொழிவிற்கு பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நகரத்தின் அடையாளத்துடன் கூடிய ஷீல்டை அன்பளிப்பாக கொடுத்தார்.

மேயருடைய இந்த சொற்பொழிவிற்குப் பிறகு இன்றைய இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறக் கூடிய மற்றுமொரு விருந்தினரான Mr. wolf walter என்பவர் தனது உரையை நிகழ்த்தினார். அவர் ஜெர்மன் இஸ்லாம் கான்ஃபரன்ஸுடைய செயலாளர் ஆவார். அவர் தனது உரையில் இவ்வாறு கூறினார்:

கண்ணியத்திற்குரிய ஹுஸூர் அன்வர் அவர்களே! ஜெர்மனி ஜமாஅத்தின் அமீர் அவர்களே! மற்றும் ஏனைய சகோதரிகளே! சகோதரர்களே! எனக்கு

அழைப்பு கொடுத்தற்கு நன்றி! நான் இன்று ஜாமிஆ அஹ்மதிய்யாவின் திறப்பு விழா சந்தர்பத்தில் இங்கு இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. நியூரன்பர்க்கில் மைக்ரேஷன் மற்றும் அடைக்கலம் பெற்றவர்களுக்கு பொறுப்பான அரசாங்கத்தின் சார்பான நிறுவனம் இருக்கின்றது. அங்கு இஸ்லாம் கான்ஃபரன்ஸ் உடைய அலுவலகம் இருக்கின்றது. நாங்கள் இங்கு ஜெர்மனியின் உள்துறையுடன் பணியாற்றி வருகின்றோம். அவர்களிடம் கான்ஃபிரன்ஸின் பொறுப்பு இருக்கின்றது. இமாம்களுக்கான கல்வி என்பது ஜெர்மனியில் நமக்கு ஒரு முக்கிய விஷயமாகும். 2009-ம் ஆண்டு இஸ்லாம் கான்ஃபிரன்ஸில் நான் இந்த விஷயத்தை ஒட்டு மொத்த அளவில் வெளிப்படுத்தி இருந்தேன். அதாவது இமாம்களின் பங்களிப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பாகும். உங்களுடைய ஜமாஅத்தின் இமாம்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றனர். அவர்கள் வெளிப்புற ரீதியில் மற்ற மார்க்கத்தினருடன் தொடர் கொள்வதற்காகவும், அரசாங்கத் துறையுடன் தொடர்பு கொள்வதற்காகவும், குறிப்பாக நகர்ப்புற நிர்வாகத்துடனான தொடர்புகளுக்காகவும் முயற்சி செய்கின்றனர். அவர்களின் தலையாய பணி என்பது மார்க்கப் பொறுப்புகளை நிறைவேற்றுவதும், ஆன்மிகத் தேவைகளை முழுமை செய்வதும் ஆகும். ஆயினும், அவற்றுடன் மார்க்க, தனிப்பட்ட மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பாகவும் கேள்விகளுக்கான பதில் கொடுப்பதன் காரணமாக ஏராளமான இமாம்கள் மீது குறிப்பாக நம்பிக்கை வைக்கப்படுகின்றது. இந்த செயல்பாட்டின் காரணமாகவும், தமது ஜமாஅத்தின் பிரதிநிதித்துவத்தின் காரணமாகவும் இந்த மக்கள் சர்வ சமய மார்க்கங்களுடன் உரையாடல் நிகழ்த்தவும், கலாச்சார விவகாரங்களில் ஒரு சிறப்பான பங்களிப்பை வழங்குகின்றார்கள். அவர்கள் பள்ளிக்கூடங்கள், தேவாலயங்கள் அல்லது நகரத்தின் நிர்வாகத்திற்காக இஸ்லாம் குறித்து தகவல்கள் கொடுக்கக் கூடிய நபர்களாக இருக்கின்றனர்.

முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் ஒருவர் மற்றவருக்கு எதிரான தவறான தாக்கங்களை குறைப்பதற்காக ஒருவர் மற்றவரை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்; மேலும் அதற்கு எல்லாவற்றையும் விட முதலில் தொடர்பு அவசியமாகும். இமாம் தமது அறிவின் அடிப்படையில் புரோடக்ஷனிற்காகவும் ஒரு பயனுள்ள பங்களிப்பை செலுத்த முடியும். அப்போதுதான் ஒருவர் மற்றவருடன் இணைந்து வசிக்க முடியும். எனவே ஜெர்மனியில் வளர்ந்து ஆளாகிய மற்றும் இங்குள்ள கல்வியறிவு படைத்த மக்கள் இமாமிற்கான பணியை செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மார்க்க ஊழியர்கள் கல்விப் பயில்வதும், மேலும் இந்தத் துறையில் பணி செய்வதும் மார்க்க சட்ட உரிமைகளுக்கு முற்றிலும் பொருத்தமானதாகும். அதில் இவ்வாறு உள்ளது: அதாவது மார்க்க நிறுவனங்கள் இந்த விவகாரங்களில் சுய அதிகாரம் பெற்றிருக்கின்றன. இதன் காரணமாக இதுபோன்ற மார்க்க நிறுவனங்கள் அதாவது எவற்றில் அறிவு கற்றுக் கொடுக்கப்படுகின்றனவோ அவை இஸ்லாம் கான்ஃபிரன்ஸின் விருப்பத்திற்கு முற்றிலும் ஏற்புடையதாகும். ஜாமிஆ அஹ்மதிய்யா தனது இந்த கல்விரீதியிலான பங்களிப்பின் அடிப்படையில் எதிர்காலத்திற்காக ஒரு நல்ல பாதையை அமைக்கக் கூடியதாகும். மேலும் ஜமாஅத் முன்மாதிரியின் வடிவில் இஸ்லாம் கான்ஃபரன்ஸ் முன்வைத்த அதே ஆலோசனையின்படி தான் பணி செய்து கொண்டிருக்கின்றது. எனது நல்விருப்பங்கள் இன்று நிகழும் இந்த திறப்பு விழா நிகழ்ச்சியுடனும், மேலும் அதன் நிறுவனத்துடனும் இருக்கின்றது. நன்றி.

அதன் பிறகு, ஸ்டேட் செகரட்டரி Mr. Fudolf Kriszeleit அவர்கள் தமது உரையை முன்வைத்தார்கள். அன்னார் ஹேஸன் மாநிலத்தின் சட்டத்துறை, மற்றும் ஐரோப்பிய இன்டிகிரேஷன் அமைச்சகத்தின் செயலாளரும் ஆவார்கள். நாகரீக அமைச்சகத்துடன் இணைந்து இந்த அமைச்சகம் பள்ளிக்கூடங்களில் இஸ்லாமிய போதனைகள் தொடர்பான விவகாரங்களுக்கு பொறுப்பு வகிக்கின்றது. அவர் கூறினார்:

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே, வாகஸ் ஹாவ்ஸர் ஸாஹிப் அவர்களே! ஹேஸன் மாநிலத்தின் பிரதிநிதிகளே! சகோதர, சகோதரிகளே! இமாம்களுக்கான தர்பிய்யத் வழங்கும் இந்த நிறுவனத்தின் திறப்பு விழாவில் இன்று நிகழ்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஹேஸன் மாநிலத்தின் நிர்வாகத்தின் சார்பாக குறிப்பாக ஹேஸன் மாநிலத்தின் முதல்அமைச்சர் Volker Bouffer சார்பாகவும் மற்றும் அன்னாரின் பிரதிநிதி நாகரீகத் துறை அமைச்சர் Mr. Jorg Uwe Hann சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்டிகிரேஷன் மற்றும் அரசியல் விவகாரங்களின் அடிப்படையில் இது ஒரு நல்ல மற்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகும். அதாவது இந்த நிறுவனம் தனது பணியை துவங்குவதும், இமாம்களுக்கு கல்வி கற்பிப்பதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நமது நாட்டின் மொழியில் புலமை பெற்றிருக்கின்ற மேலும் ஜெர்மனியின் கலாச்சாரம் மற்றும் நாகரீகத்தை அறிந்திருக்கின்ற மேலும் இந்த நாட்டின் குடிமக்களாக இருக்கக் கூடிய இமாம்களுக்கு பயிற்சி வழங்குவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மற்ற கலாச்சாரத்தைச் சேர்ந்த மக்களும், தற்போது மார்க்க ரீதியில் மற்றும் மற்ற விவகாரங்களில் வேறு வகையான கடந்த காலத்தை கொண்டிருப்பவர்களும், இங்கு ஹேஸன் மாநிலத்தின் நிரந்தரமாக வசிக்கக் கூடிய குடிமக்களாக இருக்கின்றனர். இதனையே தமது வீடாக ஆக்கிக் கொண்டுள்ளனர். இங்கு பாதுகாப்பை உணர்கின்றனர். மேலும் அவர்கள் தங்களை இந்த சமூகத்தின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் இந்தப் பணிக்காக தங்களது மார்க்க வழிகளின் படி நடப்பதில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை செலுத்த முடியும்.

இன்று ஜெர்மனியில் பல்வேறு மார்க்கங்கள் இருப்பது ஓர் உண்மையாகும். மேலும் குறிப்பாக ஜெர்மனியிலும், ஹேஸன் மாநிலத்திலும் இஸ்லாத்தை புறக்கணித்து விட முடியாது. முஸ்லிம்களின் வணக்க ஸ்தலமும், முஸ்லிம்களின் நாகரீக தலைமையகமும் எந்தவகையிலும் விதிவிலக்கைப் பெற்ற சித்திரம் ஒன்றும் கிடையாது. மாறாக, நிச்சயமாக எங்களது சமூகத்தின் அங்கமே ஆகும். எவ்வாறு முஸ்லிம்கள் சுயமே எங்களது ஹேஸன் சமூகத்தின் ஓர் அங்கமாக இருக்கின்றார்களோ, அதேபோன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஹேஸனில் சுமார் 4 லட்சம் மக்கள் இந்த உலகளாவிய மார்க்கத்தில் அதாவது இஸ்லாத்தை பின்பற்றக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்களில் ஏராளமானவர்களுக்கு இங்குள்ள குடிமக்களுக்கான உரிமைகளும் கிடைத்திருக்கின்றது. மேலும் இந்த அடிப்படையில் எங்களது சமூகத்தில் இணைந்திருக்கின்றனர்.

இது ஒரு விநோதமான தற்செயலான நிகழ்வு ஆகும். அதாவது நாம் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலேயே, அப்துல்லாஹ் வாகஸர் ஸாஹிப் அவர்களும் குறிப்பிட்டது போன்று இது ஒரு தற்செயலான நிகழ்வாகும். மிஸ் பீர் கல்சர் அமைச்சர் ஆவார். மேலும் இன்டிகிரேஷன் அமைச்சர் மிஸ்டர் Uwe Hann இருக்கின்றார். அவர் தற்போது Wiesbaden என்ற இடத்தில் இருக்கின்றார். அவருடைய பல வருட உழைப்பு, ஆராய்ச்சி மற்றும் தீர்மானங்களின் கடினமான பாதைகளை கடந்து மாநில அரசாங்கம் இந்த நிலை வரை எட்டியுள்ளது. அதாவது ஆகஸ்ட் 1 2013-ம் ஆண்டு முதல் இரண்டு இஸ்லாமிய அமைப்புகள் சட்டத்தின் பிரிவு எண் 7 மற்றும் 3 -வது பாராகிராஃபின் கீழ் ஹேஸனில் இஸ்லாமிய மார்க்கத்திற்கான கல்வியை பயிற்றுவிப்பதை துவங்க முடியும். அதில் ஒன்று அஹ்மதிய்யா ஜமாஅத் ஆகும். மற்றொன்று, Diteb என்ற பெயர் கொண்ட துருக்கியைச் சேர்ந்த இஸ்லாமிய அமைப்பாகும். நான் உங்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்த அளவிலும், மிஸ்டர் வாகேஸர் ஸாஹிபிற்கு தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் இந்த எல்லையற்ற கஷ்டங்களுடன் கடக்கக் கூடிய பாதைகளுக்காக தயாராகி இருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹேஸன் மாநிலத்தின் பள்ளிக் கூடங்களில் மார்க்கப் போதனைக்களுக்காக எங்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஒரு நீண்டகால ஆய்வுகளுக்கும், பரிசோதனைகளுக்கும் பிறகு ஒரு தகுதிவாய்ந்த மற்றும் நம்பிக்கைக்குரிய மற்றும் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய பார்ட்னர் கிடைத்திருக்கின்றார். இந்த வகையில் நாங்கள் மிகவும் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். இங்கு நீங்கள் இமாம்களுக்கு கல்வி கற்பிப்பீர்கள். அவர்கள் ஜெர்மனியின் Tradition மற்றும் வரலாற்றை அறிந்தவர்கள் ஆவர். இதன் காரணமாக, ஜெர்மனியில் வளரக் கூடிய முஸ்லிம் இளைஞர்களுக்கு, ஒரே மொழியில் பேசக் கூடியவர்களுடனும், ஒரே புரிதல் கொண்டவர்களுடனும் தொடர்பு கொள்வதற்கு ஒரு மிகச் சிறந்த வழிமுறையாக அவர்கள் இருப்பார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா எதிர்காலத்தில் தனது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்று ஆசை கொள்கிறேன். மேலும் இமாம்களின் கல்விக்கான

---

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஏற்பாட்டையும் வெற்றிகரமாக செய்ய வேண்டும் என்றும் நான் ஆசைப்படுகின்றேன். மேலும் உங்களுடைய இந்த கல்வி நிறுவனம் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை கொண்டதாகவும் இருக்க வேண்டும். நன்றி;

இந்த சொற்பொழிவிற்கு பிறகு, நேஷனல் உமூரே காரிஜா செகரட்டரி தாவூத் ஸாஹிப் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தை முன்வைத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.


### ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் திறப்பு விழாவின் போது ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய உரை

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தஷஹ்ஹுத், தஅவூத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்:

இன்று நம்மிடையே தற்போது ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர்கள் மற்றும் ஏனைய அஹ்மதி சகோதரர்கள் மட்டுமின்றி மற்ற கண்ணியத்திற்குரிய விருந்தினர்களும் வருகை தந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இஸ்லாத்துடன் தொடர்பு கிடையாது. மாறாக, மற்ற மார்க்கங்களை சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். எனவே நான் முதலில் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நமது நிகழ்ச்சிக்காக இங்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்த நிகழ்ச்சியை சிறப்பித்திருக்கின்றார்கள். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதி நிறைந்த இஸ்லாத்தை முன் வைக்கக் கூடிய ஜமாஅத் ஆகும் ; மேலும் அது உண்மையான இஸ்லாம் ஆகும் என்ற விஷயத்தை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், பல்வேறு மார்க்கங்கள் பரஸ்பரம் தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், இந்த நாட்டின் கல்வியறிவு படைத்த இளைய பிள்ளைகள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நுழைந்து இருக்கின்றனர் ; மேலும் கல்வி பயின்று வருகின்றனர் என்ற விஷயத்தையும் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றனர். தீவிரவாதத்தை விரும்பக் கூடிய சிலர் இஸ்லாம் தொடர்பாக சில தப்பெண்ணங்களை உருவாக்கி விட்டனர். அவற்றை இந்த மாணவர்கள் அகற்ற வேண்டும். எவ்வாறு இருப்பினும்,இந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் இந்தக் கருத்து வெளிப்படுகின்றது. அதாவது, இவர்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது மிகுந்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கடந்த நூற்றி இருபத்தி மூன்று, இருப்பத்தி நான்கு ஆண்டு கால வரலாறும் இதற்கு சாட்சியாக இருக்கின்றது. அஹ்மதிய்யத் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தை முன்வைக்கக் கூடிய உண்மையான இஸ்லாம் ஆகும். மேலும் இன்ஷா அல்லாஹ் இங்கிருந்து படித்து முடித்து வெளியேறக் கூடிய மாணவர்கள் இஸ்லாத்தின் உண்மையான சித்திரத்தை இந்த நாட்டு மக்களுக்கு காட்டுவார்கள் ; அதனை மக்கள் காண்பார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இங்கு நான் இன்னும் ஒரு விஷயத்தை சேர்க்க விரும்புகிறேன். அதாவது ஜெர்மனியின் கல்வியறிவு படைத்த மாணவர்கள் மட்டுமே இந்த ஜாமிஆவில் கல்வி பயில்கின்றனர் என்று இங்கு அதிகமாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனால், இந்த ஜாமிஆ அஹ்மதிய்யாவிலோ ஐரோப்பாவின் மற்ற நாடுகள் அதாவது அவற்றில் பெல்ஜியம், ஹாலந்து, ஃபிரான்சு மற்றும் அது மட்டுமின்றி இன்னும் சில நாடுகளைச் சார்ந்த மாணவர்களும் இங்கு படித்து வருகின்றனர். மேயர் ஸாஹிப் அவர்கள் குறிப்பிட்டது போன்று லண்டன் நகரத்தோடு ஒப்பிடும் போது, இந்த நகரம் சிறிய நகரம் ஆகும். இங்கு ஜாமிஆ அஹ்மதிய்யா நிறுவப்பட்டிருக்கின்றது. மேலும் இங்கு இஸ்லாமியக் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது. ஆக, இங்கு ஜெர்மனியின் மாணவர்கள் மட்டுமே படித்துக் கொண்டிருக்கவில்லை ; மாறாக, இந்த சிறிய நகரத்திலிருந்து கல்வியின் ஒளி புறப்பட்டு முழு ஐரோப்பாவிலும் பரவ இருக்கின்றது. மேலும், ஐரோப்பியன் யூனியனோ தனது சமூகத்தின் காரணமாக, பொருளாதார நிலைமைகளின் காரணமாக, அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக ஒன்றுபட்டு செயலாற்றி வருகின்றது. ஆனால், மார்க்கத்தின் பக்கம் ஐரோப்பியன் யூனியன் கவனம் செலுத்துவது கிடையாது. ஆக, ரெட்ஷெட்டில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே எப்படிப்பட்ட ஒன்றுபட்ட ஐரோப்பாவை நிறுவியிருக்கின்றது என்றால், அங்கிருந்து இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மையான போதனையை வழங்கக் கூடிய நபர்கள் முழு ஐரோப்பாவிலும் பரவிவிடுவார்கள். மேலும், ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டு ஐரோப்பாவிற்கு வெளியேயும் இஸ்லாத்தின் உண்மையான சித்திரத்தை மக்கள் முன் சமர்ப்பிப்பார்கள். இந்த அடிப்படையிலும் இந்த கண்ணியம் இந்த நகரத்திற்கு கிடைத்துள்ளது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்)அவர்கள் கூறினார்கள்: விருந்தினர்களிடம் இந்த சில விஷயங்களை கூறிய பிறகு நான் எனது அசல் நோக்கத்தின் பக்கம் தற்போது வருகின்றேன். அதாவது ஜாமிஆவின் திறப்புவிழா தொடர்பாக இங்குள்ள மாணவர்களுக்கு சிலவற்றை கூறுவேன். ஜாமிஆவின் மாணவர்களும், அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த அனைவரும் இந்த விஷயத்திற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். அதாவது, இங்கு அல்லாஹ் ஜாமிஆ அஹ்மதிய்யாவை நிறுவியுள்ளான்; அதற்கான நற்பேறை உங்களுக்கு வழங்கியுள்ளான் என்பதற்காக நீங்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். இது ஒரு மிகப் பெரிய புரோஜக்டாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்றும் எண்ணெய் வளத்தின் மூலம் பணம் படைக்கின்ற ஜமாஅத்தோ அல்லது வியாபாரத்தை சார்ந்திருக்கின்ற ஜமாஅத்தோ ஒன்றும் கிடையாது. அஹ்மதிய்யா ஜமாஅத் எப்படிப்பட்ட ஒரு சிறிய ஜமாஅத் என்றால், அது தனது அனைத்து புரோஜக்ட்களை அது பள்ளிவாசல்களுக்கானதாக இருக்கட்டும்; அல்லது மிஷன்ஹவுஸ்களுக்கானதாக இருக்கட்டும்; அல்லது மிஷனரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடிய புரோஜக்ட்களாக இருக்கட்டும், தப்லீஃக் நிகழ்ச்சிகள் சார்ந்தவையாக இருக்கட்டும்; நூல்களின் வெளியீடுகள் தொடர்பானதாக இருக்கட்டும்; ஜாமிஆ முரப்பி மார்களை ஆயத்தப்படுத்தக் கூடியவையாக இருக்கட்டும், மற்றும் முபல்லிஃக் மார்களை தயார்படுத்தக் கூடியவையாக இருக்கட்டும்; இவை அனைத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் பொருள் தியாகம் செய்து கொடுக்கும் சந்தாக்களின் மூலமாகவே இந்த செலவீனங்கள் முழுமை செய்யப்படுகின்றன.



A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE — No. 100/59-A, 1st Floor, South Thalkkat Street, Melapalayam, Tirunelveli-627005, Tamil Nadu, India — +91 9659389953 — toonicegems@gmail.com
Al-Nida GEMS — No. 1/83, 1st Floor Village Road, Balaji Nagar Extension, Puzhuthivakkam, Chennai-600091, Tamil Nadu, India — +91 9042150339 — alnidagems@gmail.com
HG GEMS — HANIYAHANA GEMS CO., LTD. — No. 191/16, Soi Puttha Osot, Siphraya, Bangrak, Bangkok - 10500, Thailand — +66 638751327 — gemscertify22@gmail.com


ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இது மிகப் பெரிய புரோஜக்டாக இருந்தது. மேலும், இது முழுமையடைவதற்கு அநேகமாக ஓரிரு வருடங்கள் ஆகிவிடும் என்பது எனது எண்ணமாக இருந்தது. ஆனால், அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனிக்கு இந்த நற்பேறை வழங்கினான். அதாவது அவர்கள் இதனை மிகவும் விரைவாக முழுமை செய்து விட்டார்கள். மேலும், இன்று எல்லாவகையான வசதிகளையும் கொண்டிருக்கின்ற ஓர் அழகிய கட்டடம் கட்டப்பட்டுவிட்டது. அது ஜாமிஆ மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விஷயத்திலும் மாணவர்களும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும், தற்போது இந்த நன்றியுணர்வின் ஒரு வெளிப்பாடு இவ்வாறும் அமைகின்றது. அதாவது, நீங்கள் உங்களது கல்வியின் பக்கம் முழுமையாக கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் எந்த நோக்கத்திற்காக நுழைந்துள்ளீர்களோ அந்த நோக்கத்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அந்த நோக்கம் இதுவே ஆகும். அதாவது, உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவது, உங்களிடம் ஓர் உலகியல்வாதியிடம் கிடைக்காத உதாரணத்தைக் கொண்ட அந்த அன்பையும், நேசத்தையும் உலகின் ஒவ்வொரு நபருக்காகவும் உங்களிடத்தில் உருவாக்குவது ஆகும். எனவே இந்த பொறுப்பை புரிந்து கொள்ளுங்கள். மேலும் இந்த நோக்கத்தை அடைவதற்காக உங்களது கல்வியை பயிலுங்கள். மேலும் இந்த நோக்கத்தை அடைவதற்காக உங்களது கல்வியை பயின்ற பிறகு அதனை அழகிய முறையில் பரப்புவதற்கு உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உலகை அழிவிலிருந்து எப்படி பாதுகாக்க வேண்டும்? ஒன்று, உலகியல் அல்லது அரசியல் முயற்சிகள் இருக்கின்றன. அதில் நாம் அமைதி, நேசம், அன்பு ஆகியவற்றிற்கான தூதுச் செய்தியை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். பின்னர் உலகியல்வாதியும் கூட உலகை போர் சூழல்களிலிருந்து அச்சமூட்டுகின்றார். நானும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறிக் கொண்டிருக்கின்றேன். ஆனால், ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற ஒரு முபல்லிஃக், ஒரு முரப்பி ; அவர் உலகிற்கு அல்லாஹ்வின் இருப்பைப் பற்றிய உணர்வை ஏற்படுத்த வேண்டும். இறைவனுக்கு அருகில் மக்களை கொண்டு வருவதற்கான தனது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்.

நமது ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு செயலையும் வல்ல இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு இதயத்தில் உருவாகாத வரை உலகில் அமைதியையும், நீதியையும், நேசத்தையும் நிலை பெறச் செய்ய முடியாது. எனவே நீங்கள் எங்கு உலகிற்கு இந்த உணர்வை ஏற்படுத்த உங்களது முயற்சிகளை செய்வீர்களோ அங்கு எல்லாவற்றையும் விட முதலில் நீங்கள் உங்களை அந்த உணர்வு மற்றும் பொறுப்பிற்கு தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் இந்த போதனையை பேணி நடக்க வேண்டும். நீங்கள் வல்ல இறைவனுடன் உங்களது தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் உண்மையான வடிவில் மற்றவர்களுக்கு கூறமுடியும். இறைவன் யார்? இறைவனது போதனை என்ன? இறைவனுக்கு தனது படைப்பினத்துடன் எவ்வளவு நேசம் இருக்கின்றது? மேலும் அந்த அன்பின் காரணமாகவே வல்ல இறைவன் ஒவ்வொரு காலத்திலும் உலகின் சீர்திருத்தத்திற்காக நபியை அனுப்பினான். மேலும், இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இந்த உலகிற்கு அனுப்பினான். மேலும், மார்க்கத்தை முழுமை ஆக்கினான். மேலும், பின்னர் ஓர் இயற்கையான நடைமுறை இருக்கின்றது. அதில் சிலமுறை மார்க்கத்தில் சீர்கேடுகள் உருவாகி விடுகின்றன. அந்த இறுதியான மற்றும் முழுமையான மார்க்கத்தின் மறுமலர்ச்சிக்காக மீண்டும் அந்த போதனைகளை நடைமுறைபடுத்துவதற்காக அதனை அழகிய வடிவில் முன்வைப்பதற்காக இக்காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனவே நீங்கள் இந்த விஷயங்களை மக்களுக்கு கூறுகின்றபோது, அதற்கு முன்னர் முதலில் நீங்கள் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அதாவது, உங்களுக்கு வல்ல இறைவனுடன் தொடர்பு எப்படிப்பட்டதாக இருக்கின்றது? என்று ஆய்வு செய்ய வேண்டும். நீங்கள் இஸ்லாத்தின் போதனையின்படி எப்படி அமல் செய்கின்றீர்கள்? உங்களுக்கு இறைவனின் படைப்பினத்துடன் எந்த அளவிற்கு நேசமும், அன்பும் இருக்கின்றது? என்றும் ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த விஷயங்களை நீங்கள் கருத்தில் கொண்டால் பின்னர் இன்ஷா அல்லாஹ் உங்களுடைய பணிகளில் பரக்கத் ஏற்பட்டுக் கொண்டே சென்று விடும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆனில் மார்க்கத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. அதாவது, உங்களில் ஒரு கூட்டம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால், அவர்கள் மார்க்கத்தை நன்றாக கற்றறிந்து அதனை பரப்புவதற்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும். தற்போது, எப்படிப்பட்ட ஏராளமான வாக்ஃபீனே நவ் பிள்ளைகள் இருக்கின்றனர் என்றால், அவர்களின் பெற்றோர்கள் அவர்கள் பிறப்பதற்கு முன்னால் மார்க்கத்தை கற்பதற்காக வக்ஃப் செய்துள்ளார்கள். அதன் பிறகு நீங்கள் சுயமே உங்களை சமர்ப்பித்துள்ளீர்கள். உங்களுக்கு எந்த நிர்ப்பந்தமும் இருக்கவில்லை அல்லது உங்கள் மீது எந்த கட்டாயமும் இருக்கவில்லை. மாறாக, நாங்கள் எங்களை மார்க்கத்திற்காக சமர்ப்பிக்கின்றோம் ; மேலும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவோம் என்று நீங்கள் சுயமே கூறினீர்கள். எனவே மார்க்கத்தை கற்றுக் கொண்டு விட்ட பிறகு அல்லது கற்றுக் கொள்வதற்காக வந்திருக்கின்ற போது பின்னர் அதற்கான உணர்வும் உங்களிடம் இருக்க வேண்டும். வல்ல அல்லாஹ் தஃபக்கூஃபித்தீன் என்பதுடன் இதனையும் கூறியுள்ளான். அதாவது உங்களது நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? என்று கூறியிருக்கின்றான். ஒவ்வொரு சமுதாயத்தையும் அல்லது எங்கு உங்களது சூழல் இருக்கின்றதோ அங்கு நீங்கள் அவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும். வல்ல இறைவனின் பக்கம் அவர்களை கொண்டு வர வேண்டும் என்று நான் முன்னர் கூறியது போன்று அதனை செய்ய வேண்டும். இறைவனின் இருப்பைக் குறித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்யுங்கள். மார்க்கத்தின் தேவையைக் குறித்து அவர்களுக்கு உணர்வூட்டுங்கள். மேலும் தவறான பணிகள் மற்றும் வழிகேட்டிலிருந்து தப்பிப்பதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டுங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இஸ்லாத்தில் எங்கு அல்லாஹ்விற்குரிய உரிமைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளானோ அங்கு அடியார்களின் உரிமைகள் என்ற ஹுகூகுல் இபாதுடைய முக்கியத்துவத்தைக் குறித்தும் மிக அதிகமாக எடுத்துரைத்துள்ளான். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதனையே கூறியுள்ளார்கள்: இரண்டு மாபெரும் நோக்கங்கள் இருக்கின்றன. அவற்றை எடுத்துக் கொண்டு நான் உலகில் வந்துள்ளேன். ஒன்று அடியார்களை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டும்;மேலும்,இரண்டாவது அடியார்கள் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை செலுத்துவதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்ட வேண்டும். பின்னர், இதில் இந்த விஷயமும் இடம் பெற்று விடுகின்றது. அதாவது, அனைத்து வகையான மார்க்கப் போர்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். ஆக, இன்று உலகில் முன்வைக்கப்படுகின்ற இஸ்லாத்தின் சித்திரம் என்பது நவூதுபில்லாஹ் இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் ஆகும்; கடுமையான மார்க்கமாகும்; மேலும், இஸ்லாம் வெறும் பயங்கரவாதத்தையே ஆதரிக்கின்றது என்பதாகும். ஆக, இதனை மக்களின் மூளைகளிலிருந்து அகற்றுவதும் உங்களுடைய பொறுப்பாகும். மேலும் அதற்காக நீங்கள் உங்களது நடத்தைகளிலும் மாறுதல்களை உருவாக்க நேரிடும். உங்களது நடத்தைகளை எப்படி ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றால், உங்களிடத்தில் பரஸ்பரம் அன்பும், நேசமும் இருக்க வேண்டும். உங்களுக்கு ருஹமாஉ பய்னஹும் என்பதற்கான கட்டளை இருக்கின்றது. ஆனால், அத்துடன் இந்த கட்டளையும் இருக்கின்றது. அதாவது உண்மையான முஸ்லிம் யாரென்றால், அவரிடமிருந்து மற்றவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் ; மேலும் அவர் அமைதியை விரும்பக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அமைதியை பரப்பக் கூடியவராகவும், அன்பையும், நேசத்தையும் பரப்பக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அத்தகைய நபரிடமிருந்து மற்றவர் பாதுகாப்பு பெற்றவராக இருக்கின்றார். மற்ற மக்களை பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பாகும். எனவே இந்த போதனையை நீங்கள் உலகிற்கு கொடுக்க வேண்டும்; மேலும் இதுவே அந்த நோக்கமாகும். அதாவது இதன் மூலமாகவே நீங்கள் தஃபக்கூஃபித்தீனிற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக முடியும். இதன் பக்கம் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இது மட்டுமின்றி, அடியார்களுக்குரிய உரிமைகளில் பின்னர் ஏராளமான மற்ற உயர் ஒழுக்கங்களும், நல்லொழுக்க வழிமுறைகளும் வந்து விடுகின்றன. அவற்றின் விளக்கத்தில் எவ்வளவு சென்றாலும் அவை உங்களுக்கு வெளிப்பட்டுக் கொண்டே சென்று விடும். அதன் விளக்கத்தை பெறுவதும், அதற்கேற்ப அமல் செய்வதுமே உங்களுடைய பணியாக இருக்கும். இந்த உண்மையான உயிரோட்டத்தை உருவாக்குவதற்காக வல்ல அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனில் ஓர் உதாரணத்தையும் வழங்கி இருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: எவ்வாறு தேனீ பணி செய்கின்றதோ அதுபோன்று நீங்கள் பணி செய்ய வேண்டும். தேனீக்கள் தனது கூட்டை உயரத்தில் கட்டுகின்றன. தற்போதோ வீட்டுத் தோட்டங்கள் அளவிலும் நாம் தேனீக்களை வளர்க்கத் தொடங்கி விட்டோம். நாம் டப்பாக்களுக்கு கீழே கூட வைத்து விடுகின்றோம். ஆயினும், நிலத்திலிருந்து உயரத்திலேயே இருக்கின்றது. எனவே பொதுவாக, தேனீக்கள் தனது கூட்டை உயரமான இடங்களிலேயே கட்டுகின்றன. உதாரணமாக, மலைகளில் கட்டுகின்றன. மரங்களில் கட்டுகின்றன. இதனையே வல்ல இறைவனும் கூறியிருக்கின்றான். மேலும் இதனையே நாம் காணவும் செய்கின்றோம். எனவே உங்களது சிந்தனைகளும் உயர்வானதாக இருக்க வேண்டும்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 THU 24 OCTOBER 2024 Issue No.43

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

உங்களது அறிவின் ஆற்றல்களும் உயரங்களை சென்றடைய வேண்டுமே தவிர உலகியல் பொருட்களை சார்ந்ததாக ஆகிவிடக் கூடாது. இன்னும் கூறப்போனால், நீங்கள் வானத்தின் பக்கம் சிறகடிக்க வேண்டும். உங்களது தங்குமிடம் அல்லாஹ்வின் இருப்பின் மீது இருக்க வேண்டுமே தவிர, உலகியல் மக்களிடம் இருக்கக் கூடாது. ஆக, தேனீக்கள் நமக்கு ஒரு படிப்பினையைக் கொடுக்கின்றன. அதாவது நீங்கள் உங்களது தங்குமிடத்தை உயர்வான இடங்களில் ஆக்கிக் கொள்ள வேண்டும்; மேலும் எல்லாவற்றையும் விட மிக உயரமான தங்குமிடம் என்பது அல்லாஹ்வின் இருப்பே ஆகும். அந்த தங்குமிடத்தை பிடித்துக் கொண்டு விட்டால் பின்னர் எந்தவொரு உலகியல் தங்குமிடமும் உங்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. இங்கு இறைவன் கூறினான்: தேனீக்கள் பல்வேறு வகையான பூக்களின் மதுரந்தத்தில் இருந்து தேனை பெறுகின்றது. உங்களுக்கும் பல்வேறு வகையான பூக்கள் முன்வைக்கப்படுகின்றன. தற்போது திருக்குர்ஆன் எல்லா வகையான சிறப்புகளின் உறைவிடம் ஆகும். எல்லா வகையான போதனைகளின் உறைவிடம் ஆகும். இறைவன் வரை சென்றடைவதற்கான வழிமுறையாகும். அடியார்களுக்கான உரிமைகளை செலுத்துவதற்கான சிறந்த படிப்பினை அதில் இடம்பெற்றிருக்கின்றது. சமய நல்லிணக்கத்தை நிலை பெறச் செய்வதற்கான படிப்பினையும் அதில் இடம் பெற்றுள்ளது. எல்லா மார்க்கத்தையும் கருத்தில் கொள்வதும், அதற்கு கண்ணியமளிப்பதற்கான பாடமும் அதில் இடம் பெற்றுள்ளது. ஆக, அதற்கான கல்வியை நீங்கள் இங்கு பெற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். பின்னர் அதன் விளக்கவுரையாக ஹதீஸ்கள் இருக்கின்றன. அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தவை ஆகும். அதற்கான கல்வியை நீங்கள் இங்கு பெற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். பின்னர் ஃபிக்காஹ் வல்லுநர்கள் அதற்கு பல்வேறு விளக்கங்களை வழங்கியுள்ளனர். ஆக நீங்கள் ஃபிக்காஹ் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். பின்னர் ஒருவர் மற்றவருடைய மார்க்கத்தை அறிந்து கொள்வதற்காக நீங்கள் மார்க்கங்களின் ஒப்பீட்டை இங்கு பயின்று வருகின்றீர்கள். நீங்கள் இங்கு கிறிஸ்துவ மதத்தின் போதனையை படிப்பீர்கள்; யூத மதத்தின் போதனைகளை படிப்பீர்கள். புத்த மதத்தின் போதனைகளை படிப்பீர்கள்;மற்ற மார்க்கங்களின் போதனைகளையும் படிப்பீர்கள்; ஏனெனில், அவற்றின் போதனை என்ன? மேலும் இஸ்லாத்தின் போதனை என்ன? என்பது உங்களுக்கு தெரிய வேண்டும். ஒருவர் இஸ்லாமிய மார்க்கதின் மீது ஆட்சேபனை செய்கின்றார் என்றால், பின்னர் நீங்கள் அதற்கு எப்படி பதில் கொடுக்க வேண்டும்? என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். மற்ற மார்க்கங்களின் தீமைகளை மற்றவர்களுக்கு முன்னால் எடுத்துரைப்பதற்கு பகரமாக நீங்கள் மற்ற மார்க்கத்தின் போதனைகளைக் கற்றுக் கொண்ட பிறகு நீங்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும், போதனைகளையும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். (**தொடரும்.......**)

( நன்றி ; அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், மார்ச் 1, 2013)

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (தஃப்ஸீரே கபீர்)**

காரணமாக ஷைத்தான் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்கள் ஆவேசம் அடைந்து விடுகின்றனர். மேலும் எப்படியாவது உண்மை உலகில் பரவி விடக் கூடாது என்பதற்காக அவர்கள் தங்களது முழு ஆற்றலையும் செலவிடுகின்றனர். இந்த மக்கள் இறை இயக்கத்திற்கு எதிராக நிற்கின்றனர். சிலமுறை இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது, அவர்கள் அந்த இயக்கத்தில் பெயரளவில் இணைந்து விடுகின்றனர். உதாரணமாக அப்துல்லாஹ் பின் அபீ பின் ஸலூல் மற்றும் அவனுடன் தொடர்பு வைத்திருந்த மக்கள் ஆவர்; மேலும், சிலமுறை இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது, அத்தகைய நபர்கள் வெறும் பெயருடன் தங்களை தொடர்புபடுத்திக் கொள்வர்; ஆனால், அமைப்பை சார்ந்தவர்களாக அவர்கள் இருப்பதில்லை. உதாரணமாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் காலத்தில் இருந்த கவாரீஜ்கள் ஆவர். சிலமுறை இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது அத்தகையவர்கள் பெயருடனும் தொடர்புடையவர்களாக இருக்க மாட்டார்கள். அமைப்புடனும் தொடர்புடையவர்களாக இருக்க மாட்டார்கள். உதாரணமாக, மக்கத்து காஃபிர்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள். இவர்கள் அனைவரும் இணைந்து, எந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ் நபிமார்களை உலகில் அனுப்புகின்றானோ அந்த நோக்கங்களுக்கு தடைகளாக ஆகிவிடுகின்றனர். மேலும் அவர்களின் வழிகளில் எல்லா வகையான கஷ்டங்களையும் ஏற்படுத்தி விடுகின்றனர்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 71, காதியான் பதிப்பு 2010)

** * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத்)**

முக்கியமான பணிகள் என்று பெயர் வைக்கப்படுகின்றது.ஒருவர் வலிமையான ஈமான் கொண்டவராக இருந்தால், வலியையான ஈமான் என்பதோ ஒருபக்கம் இருக்கட்டும்; சாதாரண ஈமான் இருந்தால் கூட பின்னர் இந்த நிலை ஏன் வருகின்றது? மேலும் இந்த அளவிற்கு நிலைமை ஏன் வந்தடையப் போகின்றது?

ஈமானிய நிலை இந்த அளவிற்கு வீழ்ந்து விட்டபோதிலும், இந்நிலையிலும் ஒருவர் இந்த பலவீனத்தை உணரச் செய்து, அதற்கு சிகிச்சை அளிக்க விரும்புகின்றார் என்றால், மேலும் எந்த வழியின்படி நடந்து மனிதன் இறைவனிடமிருந்து ஓர் ஆற்றலையும், தைரியத்தையும் பெற முடியுமோ அந்த வழியை ஒருவர் கூறுகின்றார் என்றால் பின்னர் அவரை காஃபிர் என்றும் தஜ்ஜால் என்றும் கூறப்படுகின்றது. நான் கூறுகின்றேன்: இந்த மக்கள் ஈமானின் ஒரு விளைவின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்றால் பின்னர் குறைந்தபட்சம் கற்பனையானதாகவே வைத்துக் கொள்ளட்டுமே. கற்பனை செய்வதாலும் கூட பெரிய, பெரிய விளைவுகள் வெளிப்பட்டு விடுகின்றன..பாருங்கள்; அக்லீதஸுடைய அனைத்து அடிப்படையும் கற்பனையையே சார்ந்தாக இருந்தது. அதனாலும் கூட எந்தஅளவிற்கு நன்மைகள் கிடைத்திருக்கின்றன. பெரும் கல்விகளின் அடித்தளம் முதலில் அனுமானமாகவே இருக்கின்றது. எனவே ஈமானையும் கூட அனுமானமாகவே கருதி அவர்கள் மேற்கொண்டு விட்டால் பின்னர் அந்நிலையிலும் கூட அவர்கள் வெறுங்கையுடம் இருக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால், இங்கு தற்போது நிலைமை எப்படி ஆகிவிட்டது என்றால் அவர்கள் முற்றிலும் ஈமானை பொருளற்றதாக கருதுகின்றனர். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 41, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

** * * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad